Registered as Newspaper

# உதயன்


பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா | செய்தி : 021 493 0000 | விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :57 தை 8ஆம் நாள் புதன்கிழமை 22 ஜனவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2020
24 25 26
ஜனவரி / January
10.00am - 8.00pm
முற்றவெளி மைதானம்
இன்னும் 2 நாட்களில்

# தமிழுக்கு முதலிடமா? சிங்களவர் முட்டாளா?

## கொக்கரிக்கின்றார் விமல் வீரவன்ச




கொழும்பு, ஜனவரி 22

இலங்கை சிங்கள பௌத்த நாடு. சிங்கள மொழிக்குத்தான் முதலிடம் வழங்க முடியும். எந்தக் காரணம் கொண்டும் தமிழ் மொழிக்கு முதலிடம் வழங்க முடியாது. அதையும் மீறித் தமிழுக்கு முதலிடம் வழங்க சிங்களவர்கள் முட்டாள்கள் அல்லர். இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ச.

25

## இலங்கையை இறுக்குவோம்

சிவாஜி சபதம்

கொழும்பு, ஜன.22

இனப் படுகொலை மற்றும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்குப் பதவி வழங்கப்படுவது, உள்நாட்டு விசாரணைகளை வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்ட பொறிமுறை ஊடாக முன்னெடுக்கத் தவறியமை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் சுட்டிக் காட்டப்படும் என்று வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

08

## குளத்தில் மூழ்கிச் சாவு

கொடிகாமம், ஜன.22

கொடிகாமம், வரணியில் ஒருவர் குளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் நடந்துள்ளது.

வரணி, இடைக்குறிச்சி மேற்கில் உள்ள சின்ன கற்குழுக் குளத்தில் மூழ்கியே இவர் உயிரிழந்துள்ளார்.

25

## காணி சுவீகரிக்கும் முயற்சி மக்கள் எதிர்ப்பால் நிறுத்தம்



யாழ்ப்பாணம், ஜன.22

அரியாலை நெளுக்குளம் பகுதியில் 300 ஏக்கர் காணியைச் சுவீகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நில அளவீட்டுப் பணிகள் அந்

25

வாக்குறுதியைக் காப்பாற்ற

# அரசியலில் இருந்து இனி ஒதுங்குவாரா சுமந்திரன்?

## முன்னணி முக்கியஸ்தர் சுகாஷ் கேள்வி

யாழ்ப்பாணம், ஜன. 22

"கடந்த ஆட்சிக் காலத்தில் தீர்வைப் பெற்றுத்தராவிட்டால், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பதோடு, அரசியலில் இருந்தும் ஒதுங்குவேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் பல தடவைகள் கூறியிருந்தார். ஆனால் ரணில் அரசின் ஆட்சியும் முடிந்து அடுத்த தேர்தலும் வரப்போகின்ற நிலையில், தீர்வு கிட்டவேயில்லை. எனவே தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற சுமந்திரன் பதவியைத் துறந்து, அரசியலில் இருந்து ஒதுங்குவாரா? " இவ்வாறு கேள்வி எழுப்பி உள்ளார்

25

## முச்சந்தி முரளி



"வாக்கு கேக்கிறவையளுக்கு முதலில வாக்குச் சுத்தம் இருக்க வேண்டும் கண்டியளோ...!"

## டெங்கு ஒழிப்பில் வவுனியா சாதனை

யாழ்ப்பாணம், ஜன. 22

இலங்கையிலேயே டெங்குத் தொற்று அற்ற மாவட்டமாக வவுனியா மாவட்டம் இனங்காணப்பட்டுள்ளது. கடந்த 20 நாள்களாக மேற்கொண்ட கணக்கெடுப்பின்படி, டெங்கு நோயாளர்கள்

25

## பல்கலைக் கழகக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.22

பல்கலைக் கழகக் கல்லூரிகளை மூடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று வெளியான தகவல்களை அடுத்து, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கல்லூரி மாண

25

## சுகாதார தொழிலாளர்கள் மீது தாக்குதல்: 4 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜன.22

கழிவுப் பொருள்களை வாகனத்தில் ஏற்றிச் சென்ற யாழ்ப்பாணம்

25



# தமிழை நசுக்கும் வஞ்சனை கூடாது

## செல்வம் எம்.பி. சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜன.21**

**மன்னார், தலைமன்னார் பிரதான வீதி, செல்வாரி கிராமத்திலுள்ள பனந்தும்பு உற்பத்தி நிலையத்தின் பெயர்ப் பலகையில் மீண்டும் தமிழ் மொழிக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கடற்தொழில் அமைச்சின் சட்டமூலங்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார், தலைமன்னார் பிரதான வீதி, செல்வாரி கிராமத்திலுள்ள பனந்தும்பு உற்பத்தி நிலையத்தின் பெயர்ப்பலகை அமைச்சர் விமல் வீரவன்சவால் கடந்த 18 ஆம் திகதி திரைநீக்கம் செய்யப்பட்டபோது பெயர்ப்பலகையில் தமிழ் மொழியே முதலில் இருந்தது.

அப்போது மகிழ்ச்சியுடன் அதனைப் பார்த்த விமல் வீரவன்ச பின்னர் கொழும்புக்குச் சென்றவுடன் அந்தப் பெயர்ப்பலகையில் சிங்கள மொழியே முதலில் இருக்க வேண்டுமென உத்தரவிட்டு அவ்வாறே மாற்றினார். ஏன் இந்த ஓரவஞ்சனை?

தமிழ் சிங்களம் என்ற வேறுபாட்டை மறக்க வேண்டும். நாம் ஒன்றாக வாழ வேண்டுமென விரும்புகின்ற நிலையில் அமைச்சர் விமல் வீரவன்சவின் இவ்வாறான இனவாத செயற்பாடு நல்லதல்ல - என்றார். (எ-22)

## மெய்வல்லுநர் நிகழ்வு

பளை தர்மக்கேணி அ.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை பிற்பகல். 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். அதிபர் வே.செல்வகுமார் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு முதன்மை விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச உதவிப்பிரதேச செயலர் செல்வி குணஜா குணரத்தினம் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.காந்தச்செல்வன் பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஐ.குகானந்தராஜா மதிப்புறு விருந்தினராக பளை நிரோ சாரதிய பயிற்சிப் பாடசாலை அதிபர் த.நிரோஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ரு-9-159)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

◆ ◆ ◆

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி ல.முகுந்நன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலய உடற்கல்வி பாட உதவிப் பணிப்பாளர் செல்வி.பிரதீபா கிருஷ்ணபிள்ளை, பழைய மாணவியும் கொழும்பு மாநகர சபை உறுப்பினரும், மூத்த ஊடகவியலாளருமான திருமதி.உமாச்சந்திரா பிரகாஷ், மதிப்புறு விருந்தினராக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற தலைவர் ந.சிவபாலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-9)

◆ ◆ ◆

வரணி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் பி.செல்வவிநாயகம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது

நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவரும் மன்னார் பிரதேச செயலக உதவிச் செயலருமான வி.சிவராசாவும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர் வி.ரவீந்திரன் மற்றும் கௌரவ விருந்தினராக வரணி பிரதேச வைத்திய சாலை பொறுப்பதிகாரி வைத்தியர் பி.அச்சுதனும் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்வில் வெற்றிபெறும் மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி சுதாஜினி சிவராசா வழங்கி வைக்கவுள்ளார். (ரு-159)

## விபத்தில் சிக்கிய இளைஞன் சிகிச்சை பயனின்றிச் சாவு!

விபத்தில்படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த 22 வயது இளைஞன் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

வடமராட்சி, அல்வாய் கிழக்கு, அத்தாயைச் சேர்ந்த இரவீந்திரன் தனுசன் (வயத-22) என்ற இளைஞரே உயிரிழந்தார். கடந்த 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை அவரது உறவினர் வீட்டுக்கு மோட்டார் சைக்கியில் சென்று திரும்பிய போதே விபத்தில் சிக்கியுள்ளார். வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் இருந்த மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது.

தலைக் கவசம் இன்றிப் பயணித்ததால் தலையில் படுகாயம் அடைந்த அவர் மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் 6 நாள்களாக அவருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-159,26,22,173)

## வேட்பாளரை அறிவித்தது ரெலோ



வவுனியா ஜன.22

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடுவதற்கான தமது முதல் வேட்பாளரை ரெலோ இயக்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு தமிழீழ விடுதலை இயக்கத்தின் மூலமாக எமது கட்சியின் தேசிய அமைப்பாளரும் தலைமைக்குழு உறுப்பினருமான சுரேந்திரன் குருசுவாமியை (சுரேன்) வேட்பாளராக களமிறக்குவதெனத் தீர்மானித்துள்ளோம். இந்த விடயம் சம்மந்தமாக கடந்த 19.01. 2020 அன்று வவுனியாவில் இடம் பெற்ற தலைமைக்குழுக் கூட்டத்திலும் நேற்றுமுன்தினம் கூடிய யாழ்ப்பாணத்துக்கான நிர்வாகக்குழுக் கூட்டத்திலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது .

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்துக்கென ஒதுக்கப்பட்ட ஒற்றை ஆசனத்தை, நீண்ட கலந்துரையாடல்களின் பின் அரசியல் வரலாறு கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவரும் சிறந்த கல்வியலாளருமான சுரேந்திரன் குருசுவாமிக்கு ஒதுக்குவதன் மூலம் நிர்வாக திறனும் , மும்மொழித் தேர்ச்சியும் ஆளுமையும் மிக்க ஒருவரை எமது கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்திற்கு அனுப்ப முடியும். இதேவேளை இவரின் வெற்றியின் மூலம் யாழ். மாவட்டத்தில் எமது கட்சி இழந்த நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை மீளப்பெற முடியுமெனவும் உறுதியாக நம்புகின்றோம் " என்றுள்ளது. (ரு)

## கௌரவிப்பு நிகழ்வு

கொடிகாமம் ஜன 23

தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் கிளையின், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது. கொடிகாமம் தேசிய சேமிப்பு வங்கி கிளையில் ,சிறுவர் சேமிப்பு கணக்குகளை பேணுகின்ற குறித்த மாணவர்களின் பெற்றோர்கள், வார நாட்களில் வங்கிக் காரியாலயத்தில் ,பதிவினை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ரு-159)

## மாணவிகளுக்கு இளைஞர்கள் தொல்லை

### பொலிஸாரிடம் முறையீடு

முல்லைத்தீவு,ஜன.22

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் பாடசாலை மாணவிகளுக்கு வீதியில் நிறக்கும் இளைஞர்கள் அசௌகரியங்களை ஏற்படுத்தி வருகின்றனர் என்று மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் ச.கனகரத்தினம், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அதில் வள்ளிபுனம் மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் விடுத்த கோரிக்கை ஆராயப்பட்டது. அதன் அடிப்படையில் வீதியால் செல்லும் மாணவிகளுக்கு அங்கு நிற்கும் இளைஞர்கள் அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளனர் என்று அறியமுடிந்துள்ளது. இது தொடர்பில் புதுக்குடியிருப் புப் பொலிஸார் கண்காணித்து நடவடிக்கை எடுக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் ச.கனகரத்தினம் எழுத்து மூலமான கோரிக்கையை விடுத்துள்ளார். இதன் பிரதிகள் பிரதேச செயலகத்துக்கும், வள்ளிபுனம்,மாதர்கிராம அபிவிருத்தி சங்கத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-19)

11th EDITION

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

# Jaffna International Trade Fair

வடக்கிற்கான உங்களது நுழைவாயில்

JITF 2020

jitf.lk
www.jitf.lk

24 25 26 ஜனவரி January

10.00 am - 8.00 pm

Muttraweli Ground (Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)

PLATINUM SPONSOR: INSEE CEMENT
OFFICIAL PARTNERS: TELECOMMUNICATION: Sri Lanka Telecom Mobitel; FOOTWEAR: DSI; FOOD: Ruhunu; COSMETICS: British Cosmetics; POWER TOOLS: DIMO
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION
IN ASSOCIATION WITH: CCIY
ENDORSED & SUPPORTED BY: Ministry of Industry and Commerce; Consulate General of India Jaffna
PARTNER COUNTRY: India

More information: Imalka +94 71 7488107
imalka@saexhibitions.com




# B.Ed.
## Bachelor of Education
Teaching of English

The Bachelor of Education (Teaching of English as Second Language -TESL) is in high demand for employers in a variety of industries. It provides students with thorough knowledge of Education by equipping the students with a detailed understanding and skill that is applicable to the workplace and beneficial to the graduate.

**Why Choose Us?**
- Flexible time table
- Smart class room, Library, IT lab facilities
- Well experienced and qualified panel of lecturers

**Professional Teaching Practice will be provided**

Sri Lanka UGC Recognized

**Duration Approximately 12 to 18 Months**

TVEC Approved Centre

BLC CAMPUS

For more information:
0777 17 4443 Sapthika
0777 07 4449 Vithya

23/1, 4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

சம்பத் புது அல்லது சபிரி சிறுவர் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யும் உங்களுக்கு
1க்கு1
பரிசு வவுச்சர்.

# சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

தற்போது எந்தவொரு சம்பத் வங்கிக் கிளையிலும் உங்கள் வைப்பை அதிகபட்சம் 10,000/- ரூபாய் வரையில் இரட்டிப்பாக்கும் ரூ.1000/- முதல் ரூ. 5000/- வரையான வவுச்சர்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

6 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்காக புதிதாக ஆரம்பிக்கப்படும் மற்றும் தற்போது நடைமுறையில் இருக்கும் அனைத்து சிறுவர் சேமிப்பு கணக்கிற்கும் செல்லுபடியாகும்

உங்கள் பிள்ளையுடன் வளரும் சேமிப்புக் கணக்கினால் வழங்கப்படும் விசேட சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகளை அனுபவிக்கும் வரத்தினை பெற்றிடுங்கள்.

உங்கள் பிள்ளைக்கும் சேமிக்கும் நற்பழக்கத்தை அன்போடு பரிசளித்திடுங்கள்.




சம்பத் புது சம்பத் சபிரி
சிறுவர் சேமிப்பு கணக்குகள்

Sampath Bank Fitch Ratings A+(lka)

0112 30 30 50 www.sampath.lk

# மரண அறிவித்தல்கள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 | 21 |
| 01 | 01 |
| 1934 | 2020 |

## கார்த்திகேசு அருணாசலம்

மலேசியாவை பிறப்பிடமாகவும், தொல்புரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு அருணாசலம் நேற்று **(21.01.2020)** செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் கார்த்திகேசு சிதம்பரம் தம்பதியினரின் புதல்வனும் காலஞ் சென்ற சாந்தநாயகியின் அன்புக் கணவரும் குமுதினி (லண்டன்), தயாளினி (தலைவர், சித்த மருத்துவத்துறை, யாழ் பல்கலைக்கழகம்), கருணாகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மோகன தாஸ், தீபா ஆகியோரின் மாமனாரும் சுகிர்தன் (சிறீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), சுவித்தியா, செந்தில்தாஸ், திஸா, தர்ணியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(23.01.2020)** வியாழக் கிழமை பிற்பகல் 1மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று திருவடி நிலையில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தொல்புரம் மேற்கு,**
**சுழிபுரம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:- 077 055 6790**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 21 |
| 08 | 01 |
| 1937 | 2020 |

நெடுந்தீவு மேற்கை சேர்ந்த

## திருமதி குமாரவேலு தங்கம்மா

யாழ் நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் 1 ஆம் ஒழுங்கை, அனிஞ்சியன் குளம், மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரவேலு தங்கம்மா நேற்று (21.01.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு செங்கமலம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் காமாட்சிப்பிள்ளை தம்பதி களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுப்ரமணியம் குமாரவேலு (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான குணசிங்கம், நடேசு ஆகியோரின் அன்புச்சகோதரியும் கேதீஸ்வரராணி (மகளிர் அபிவிருத்தி போதனா ஆசிரியர் - மாந்தை கிழக்கு பிரதேச செயலகம்) காலஞ் சென்ற கோகிலகுமாரி மற்றும் யௌவனகுமாரி (ஆசிரியர்- மூன்று முறிப்பு அ.த.க பாடசாலை வவுனியா), உதயகுமார் (அதிபர் - பாலைப்பாணி தமிழ் வித்தி யாலயம்) காலஞ் சென்ற வினோத்குமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சோ.தேவதாசன் (ஓய்வுபெற்ற நிர்வாக கிராம சேவகர்), காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் சசிகலா (ஆசிரியர் - மு/யோகபுரம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2020) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக அனிஞ்சியன் குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 112 7277**

**1 ஆம் ஒழுங்கை, மல்லாவி**

# பாலூட்டலில் முதலிடம்

குழந்தைகளுக்குப்பால்ஊட்டும்120நாடு களில் இலங்கை முதலிடத்தில் உள்ளது என்று உலகசுகாதார அமைப்புதெரிவித் துள்ளது.

பால்மாபாவனையால்ஏற்படும்சுகாதார விளைவுகள் தொடர்பாகத் கொழும்பு தேசியவைத்தியசாலையில்நடைபெற்ற நிகழ்வொன்றில் இந்த விடயம் குறிப்பி டப்பட்டுள்ளது.

அந்த நிகழ்வில் உரையாற்றிய சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் வைத்தி யர் அனில் யாசிங்க தெரிவித்தாவது:-

பால் மா பாவனையைத்தடுப்பதுதேக ஆரோக்கியத்துக்கு முக்கியமானதாகும். இறக்குமதிசெய்யப்படும் பால்மா பயன்பாட்டின் காரணமாக சிறு குழந்தைகளைப்போன்று வளர்ந்தோரும் பெருமளவில் தொற்றா நோய்க்கு உள்ளாகின்றமை அதிகரித்துள்ளது.

அவற்றில் இருந்து மக்களைமீட்பதற்கு பால் மா பாவனைன் தொடர்பாகப் பொது மக்களுக்கு தெளிவூட்டல் வழங்கப்படுவது அவசியம் என்றார். (எ)

## மரண அறிவித்தல்

### முத்துதம்பி சபாரத்தினம்

(ஓய்வு பெற்ற தொழில்நுட்பக் கல்லூரி ஊழியர்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்து தம்பி சபாரட்ணம் (ஓய்வு பெற்ற தொழில்நுட்பக் கல்லூரி ஊழியர்) நேற்று (21.01.2020) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும் வசந்தி, ஆனந்தி, திலீப் குமார், வசந்தகுமார் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2020) புதன் கிழமை காலை 10.00 மணியளவில் 38.சின்னாலங்கண்டுவீதி.அரியாலையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(CS 30738)(14.17)

**077 990 6265**

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

# வருஷாப்திக அழைப்பு

## (ஓராண்டு நினைவு நாள்)



தோற்றம் 29.12.1959
மறைவு 02.02.2019

கடந்த வருடம் தை மாதம் 19 ஆம் நாள் (02.02.2019) சனிக்கிழமை அமரத்துவமெய்திய எங்கள் குடும்ப

**கௌண்டின்ய கோத்திரம்**
**சொர்க்கியஸ்ரீ தாணு ஐயர்**
**வாசுதேவக்குருக்கள்**

(உரும்பிராய் சாட்டுப்பத்தூர் சிவதர்மசாஸ்தா ஆலய தர்மகர்த்தா)

அவர்களின் வருஷாப்திக கிரியைகள் இன்று (22.01.2020) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


**"சபரிசவாசம்"**
**பத்தானை வீதி, தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**

**குடும்பத்தினர்.**
**077 845 3766**

## மரண அறிவித்தல்

### டேவிட் திருநேச வீரசிங்கம்

**(ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர்)**



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 03.05.1957 | 21.01.2020 |

மிருசுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் தோணிக்கல் வவுனியாவினை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட டேவிட் திருநேச வீரசிங்கம் நேற்று (21.01.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டேவிட் வீக்டோறியா தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற சிங்கராஜர் யுஸ்ரீனா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் மேரி சரோஜாவின் பாசமிகு கணவரும் டியூலன், டிலோன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (23.01.2020) வியாழக்கிழமை காலை 9.00 மணிவரை தோணிக்கல் வவுனியாவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் மிருசுவில் புனித நீக்கிலார் தேவாலயத்தில் பி.ப 01.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 2.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**சிவன்கோவில் வீதி,**
**தோணிக்கல், வவுனியா**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 9084 955 (டியூலன்)**
**077 0631764 (ஜெயா)**

# வட இலங்கைச் சங்கீத சபை

## NORTH CEYLON ORIENTAL MUSIC SOCIETY

### எழுத்துப் பரீட்சைகள்/ செய்முறைப் பரீட்சைகள் தொடர்பான அறிவித்தல் - 2020

**1. உத்தேச நேர அட்டவணை:**

வட இலங்கைச் சங்கீத சபையினால் 2020 ஆம் ஆண்டுக்கான பரீட்சைகள் மே/ யூன் மாதங்களில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. இதற்கமைவாகப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் உரியவாறு தம்மைத் தயார்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

உத்தேச நேர அட்டவணை பின்வருமாறு.

| | |
|---|---|
| எழுத்துப் பரீட்சை | 2020 மே மாதம் 16, 17ஆம் திகதிகளில் |
| செய்முறைப் பரீட்சை | 2020 யூன் மாதம் 20,21,27,28ஆம் திகதிகளில் |

**2. கருத்தரங்கும் செயலமர்வும்:**

(தரம் : 5, 6 பரீட்சைக்குத் தோற்றும் தேர்வுநாடிகளுக்கானது.)

திகதிகள்: **2020** ஏப்ரல் **17,18, 19**ஆம் திகதிகளில்
இடம் : வட இலங்கைச் சங்கீத சபை மண்டபம்

குறிப்பு: இக்கருத்தரங்கு/ செயலமர்வு தொடர்புடைய விபரங்கள் நேரடியாக அறிவிக்கப்படும்.

**செ.சந்திரராஜா**
தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை - யாழ்ப்பாணம்
(யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்.)
20.01.2020

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 11 . 06 . 1938
மறைவு 21 . 01 . 2020

அமரர்


## செல்லையா சந்திரசேகரம்

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

சாங்கர் குடும்பம்
சுவிஸ்.

# மரண அறிவித்தல்



பிறப்பு 15 - 02 - 1949
இறப்பு 21 - 01 - 2020

## செல்லத்துரை செல்வநாயகம்

(முன்னாள் வகுப்புத் தொழிலாளர் சங்கத்தலைவர்)

செல்வபுரம், கொட்டடி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வில்லூன்றி பிள்ளை யார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வநாயகம் (முன்னாள் வகுப்புத் தொழிலாளர் சங்கத்தலைவர்) நேற்று (21.01.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மரிக்கொழுந்து தம்பதிகளின் மகனும் தம்பிப்பிள்ளை சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகேந்திராதேவி (லலிதா) யின் அன்பு கணவரும் காலஞ்சென்ற கருணாதேவி மற்றும் இராசமலர், வரதராசா, நிர்மலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீதாஸ், குகதாஸ், ரவீந்திரதாஸ், ஸ்ரெனுயா, தர்ஷினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயவாணி, விஜிதா, தினோஜி, ரவீந்திரன், மக்கல் பெக்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் கவிஷா, கபின்சன், வர்ஷன், கிருஷாந்தினி, துஷாந்தினி, குகதீஸ், றுபஸ்னா, பிருத்திகா, பரணிகா ஆகியோரின் பேரனும் தேவபரம் காலஞ்சென்ற சந்திராதேவி, கமேந்திராதேவி மற்றும் கனகராஜேஸ்வரன், இராசகாந்தம், தேவராசா, பேரம்பலம், காலஞ்சென்ற கமலதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2020) புதன்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வில்லூன்றி பிள்ளையார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 335 4644, 077 950 6854

# மரண அறிவித்தல்



## நன்னியர் பொன்னையா

(பிரபா திரையரங்கு உரிமையாளர்)

உரும்பிராய் மேற்கு சிவகுலவீதியைப் பிறப்பிடமாகவும் றஞ்சிதபவனம், வல்வை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட நன்னியர் பொன்னையா ( பிரபா திரையரங்கு உரிமையாளர்) நேற்று (21. 01. 2020) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னியர் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காசிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் றஞ்சிதமலரின் அன்புக் கணவரும் பிரதீபன், பிரசாந்தன், பிரபா ஆகியோரின் அன்புத் தந்தையும் தம்பிராசா, செல்லையா, நாகம்மா, ராசம்மா, தங்கம்மா, றோசம்மா, ஜெயராணி, புஸ்பதேவி, புஸ்பலதா, சறோஜினி தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுகந்தி, பிரசன்யா, ஹுசைன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அசிதன், மகீபன், சமீரன், யாவிகா, யதீனா, யாழேன், அகமது, ஆத்திகா, அம்கர், ஆமீனா ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்ற மனோன்மணி, அருந்தவம், நவசேகரன், ஜெயசேகரம், ஜெகசோதிலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.01.2020) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்துமயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

றஞ்சிதபவனம்.
வல்வெட்டி மத்தி, வல்வெட்டி.

(ANE/1094)(11,17)

தகவல்:-
குடும்பத்தினர்.

077 261 2351

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
12 . 03 . 1933



மறைவு
25 . 01 . 2017

## திருமதி பாக்கியம் அருமைநாயகம்

திதி:- திரியோதசி (22.01.2020) பிரதோசம்

அம்மாவே தெய்வம் உலகினிலே
அம்மா நீங்கள் பொன்னுலகம் சென்று
இன்றுடன் மூன்றாண்டுகள் ஆனது. எத்தனையுகம்
கழிந்தாலும் நாம் உனை மறவோம் அம்மா
நீங்கள் பொன்னுலகம் செல்கையில் பிள்ளைகளின்
குரலைத்தானும் உமது காது குளிரக் கேட்க முடியவில்லை
என மிகுந்த வருத்தத்துடன் சென்றதைத்தான் எம்மால்
தாங்க முடியவில்லை. நாம் இன்றும் கவலையோடு வாழ்ந்து வருகின்றோம்
அம்மா. அம்மா நீங்கள் மக்களைப் பெற்ற மகராசி அம்மா எங்கள் பத்தினி
தெய்வம் அம்மா எம்முயிர் உடலைவிட்டுச்
செல்லும்வரை உம்மை மறவோம் அம்மா

767, மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 411 5387



# மரண அறிவித்தல்



## திரு.நாகலிங்கம் ராஜேந்திரன்

(ஓய்வு பெற்ற இலங்கை புகையிரத சிரேஷ்ட சாரதி)

அன்னை மடியில் : 28.11.1939

இறைவனடியில் : 19.01.2020

அளவெட்டியை பிறப்பிடமாகவும் மானிப்பாய் மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு. நாகலிங்கம் ராஜேந்திரன் 19.01.2020 ஞாயிற்றுக் கிழமையன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் (மலேசியன் பென்சனியர்), அன்னபூரணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிதம்பரநாதன், நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் அற்புதவல்லியின் (சூட்டி) அன்புக் கணவரும் ரஜனி (France), ரஞ்சித் (PABC BANK) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தக்குமார் (France), அர்ஜனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சாஜினி, பிரஷானி, ஹரிணி, தீக்ஷிதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான புஷ்பலதா, திருச்செல்வி, பாலேந்திரன் (கிற்றி) மற்றும் மகேந்திரன் (கிச்சான்), திருமதி காந்தி (டிங்கா) (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கனகசபை மற்றும் ராஜேஷ்வரி, பொன்னம்மா, பிறைசூடி (Canada) மற்றும் அமுதவதி (ரூபி), கமலவதி (பேபி), விமலநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவராஜா, காலஞ்சென்ற ஜெயவீரசிங்கம் மற்றும் அமுதகுமாரியின் அன்பு சகலையும் காலஞ்சென்ற கனகசபை மற்றும் கீரத்திராணி, செல்வநேசன் - நாகபூஷணி ஆகியோரின் சம்பந்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் பொரளை, ஜெயரட்ண மலர்ச்சாலையில் 23.01.2020 நாளை வியாழக்கிழமை காலை 09.00 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மதியம் 02.30 மணியள வில் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு 05.00 மணியளவில் கனத்தை இந்து மயானத் திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல் - குடும்பத்தினர்

முகவரி :
Summer Empire,
NO - 33, 5/7, Fredrics Road,
Wallawatta, Colombo - 06.

தொடர்பிற்கு :
ரஞ்சித் - 0777456816 (மகன்)
செல்வநேசன் - 0771172707 (சம்பந்தி)
விமலநாதன் - 075 7117117 (மைத்துனர்)



## தவறவிடப்பட்டுள்ளது

பாக்கியராசா தீபன் ஆகிய நான் 13.01.2020 அன்று மடுவிலிருந்து மன்னார் செல்லும் வழியில் கையடக்கத் தொலைபேசியை தவறவிட்டுவிட்டேன்.
கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு - 077 699 1044, 071 609 4414



## துயர் பகிர்தல்

### Dr.சிவராஜரத்தினம் மோகன்



இலண்டனில் "இளவாலை மக்கள் மன்றம்" எனும் அமைப்பை உருவாக்கி இந்த அமைப்பின் முழுமையான நிதிப் பங்களிப்புடன் பற்சிகிச்சைக் கூடத்தை இளவாலை பிரதேச வைத்தியசாலைக்கு அமைத்துத்தந்த பெருந்தகை

**Dr.சிவராஜரத்தினம் மோகன்** அவர்களின் திடீர்மரணச் செய்தி அறிந்து துயருறும் நாங்கள் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நோயாளர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச வைத்தியசாலை, இளவாலை.

(J/4691084)(11,17)



## மரண அறிவித்தல்கள்



### செல்வி பொன்னுத்துரை குகநேசமலர்

(ஓய்வுபெற்ற உப அதிபர் உரும்பிராய் - இந்துக்கல்லூரி)

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பொன்னுத்துரை குகநேசமலர் (ஓய்வுபெற்ற உப அதிபர் உரும்பிராய் - இந்துக்கல்லூரி) 20.01.2020 திங்கட்கிழமை இறைபதம் எய்திவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**வேம்பன் வீதி,**
**உரும்பிராய் தெற்கு.**

தகவல்: குடும்பத்தினர்.

077 151 7538, 076 985 2085



## செல்லையா சந்திரசேகரம்



பிறப்பு 11.06.1938
இறப்பு 21.01.2020

கைதடி கிழக்கு கைதடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சந்திரசேகரம் நேற்று (21.01.2020) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா மகேஸ்வரி தம்பதிகளின் அருமை மருமகனும் காலஞ்சென்ற சின்னம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான உதயகுமார், லோகேஸ்வரன் மற்றும் கோணேஸ்வரன் (லண்டன்), பிரதீஸ்வரன், ஈஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுஜித்தா (லண்டன்), தர்சினி, சுகந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமனாரும் கிருத்திகா, தீபிகா, அனுஷ்கா, கிஷாந்தன், அபிராம், ஆர்த்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற நாகம்மா மற்றும் செல்வரத்தினம் (லண்டன்), அன்னபூரணம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (22.01.2020) புதன்கிழமை ந.ப 12.00 மணிக்கு கைதடி ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 925 2370 தகவல்: குடும்பத்தினர்


# இடிகுண்டு நீர்த்தேக்கம் கள ஆய்வுகள் ஆரம்பம்

வலி.தென்மேற்கு, ஜன 22

மானிப்பாய் கட்டுடை பகுதியிலுள்ள இடிகுண்டு நீர்த் தேக்கம், துறை சார்ந்த நிபுணர்கள் மூலம் இன்று புதன்கிழமை சுமார் 200 அடி ஆழத்துக்கு கள ஆய்வு செய்யப்படவுள்ளது. 27 இலட்சம் ரூபா செலவில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் மானிப்பாய் பட்டினத்தில் கட்டுடை பகுதியிலுள்ள வயல்வெளியில் சுமார் 100 வருடங்களுக்கு முன் இந்த இடி குண்டு இயற்கையாக உருவானதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு பழமை வாய்ந்ததும், எப்போதும் வற்றாத நீரைக் கொண்டதுமான இடிகுண்டு நீர்த் தேக்கம், விவசாயிகள் பயன்படுத்த முடியாத நிலையிலேயே காணப்படுகின்றது. இந்த நீர்த் தேக்கத்தை புனரமைப்பு செய்வதன் மூலம் இந்தப் பகுதியிலுள்ள நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலத்தில் மேட்டுப் பயிர் செய்யக் கூடிய வாய்ப்பு உள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. பிரதேச சபைக்குச் சொந்தமான 9 பரப்பு 9 குழியில் அமைந்துள்ள நீர்த் தேக்கத்தைபுனரமைப்புசெய்ய முன்வந்துள்ள பிரதேச சபை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன்தொடர்பு கொண்டிருந்தனர். கொழும்பிலுள்ள தேசிய கட்ட ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த துறை சார்ந்த அதிகாரிகள் கடந்த 5 மாதங்களுக்கு முன் நீர்த் தேக்கத்தை நேரில் பார்வையிட்டு, இது சம்மந்தமான அறிக்கையை பிரதேச சபையிடம் கையளித்திருந்தனர். இதையடுத்து ஆய்வு செய்வதற்கான மதிப்பீடு செய்யப்பட்டு, ஒதுக்கப்பட்ட 27 இலட்சம் ரூபா நிதியில் முதற்கட்டமாக 13 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-115)


## வீடு வாடகைக்குண்டு

கச்சேரிக்கு அருகில் வாகனத்தரிப்பிட வசதியுடன் கூடிய தளபாடத்துடனும் அல்லது தளபாடம் இல்லாமலும் வாடகைக்கு வழங்கப்படும்.

071 697 6269, 077 723 8297

## Group class

தரம்: 4 - 5
மாணவர்களுக்கானது
பிரபல ஆசிரியர்

077 320 0884

## அரைக்கும் ஆலைக்கு வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் அரைக்கும் ஆலைக்கு வேலையாள்கள் தேவை.
அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 077 6104 812

## வேலையாள் தேவை

முகமாலையில் பண்ணை ஒன்றில் தங்கி நின்று வேலைசெய்வதற்கு ஆள்கள் தேவை.
ஆடு தொடர்பாக அனுபவம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

076 430 9652

## வேலைவாய்ப்பு

- கணினி இயக்குநர்கள்
- அலுவலக உதவியாளர்கள்

(அச்சக வேலையில் அனுபவம் உள்ளவர்கள்)
திறமைக்கேற்ப கூடிய வேதனம் வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்தில்...
077 618 4425/077 704 9515

## புதிய கட்டடம் வாடகைக்கு

வட்டுக்கோட்டை, மாவடிச் சந்தியிலிருந்து சித்தங்கேணி பாதையில் கட்டடம் வாடகைக்கு கொடுக்கப்படும்.
தனியார் நிறுவனம், வியாபார நிலையங்களுக்கு தேவைப்படுவோர் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- 077 711 0891

# ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு

## பெப்.15 இற்கு முன் விண்ணப்பம்

கொடிகாமம், ஜன.22

வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சம் பேருக்குத் தொழில் வாய்ப்பு வழங்கும் திட்டத்தைப் பலநோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களம் ஆரம்பித்துள்ளது.




ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்‌ஷவின் சௌபாக்கியத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக வறுமை இல்லாத இலங்கையை உருவாக்குதல் என்ற குறிக்கோளை அடையும் நோக்கத்துடன், குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்திலும் விடக் குறைந்த கல்வி தரத்தைக் கொண்டவர்களுக்காக இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திணைக்களத்தின் மூலம் தொழில் வாய்ப்பைப் பெறவுள்ளோருக்கு 6 மாதங்கள் தொழில் பயிற்சி வழங்கப்படவுள்ளது. அதற்கான விண்ணப்பங்கள் தற்பொழுது கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பயனாளிகள் கிராம உத்தியோகத்தரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு 22 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சியின் பின்னர் தொழில் தகைமைக்கு ஏற்ப தொழில்வாய்ப்பு வழங்கப்படும். விவசாய உற்பத்தி உதவியாளர், பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவை உதவியாளர் அடங்கலாக 25 சேவைப்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பிரதேச செயலக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். இது தொடர்பான விவரங்கள் அடங்கிய விளம்பரம், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய தேசியப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளது.

க.பொ.த சாதாரண தரம் சித்திக்கான மட்டத்தை விடக் குறைந்த கல்வித் தகைமையை உடையவராக இருத்தல், வயதெல்லை 18- 40, சமுர்த்தி நிவாரணம் பெறுவதற்கு தகைமை பெற்ற ஆனால் நிவாரணம் பெறாத குடும்பத்தில் வேலை வாய்ப்பு இல்லாது இருத்தல், சமுர்த்தி நிவாரணம் பெற்ற குடும்பத்தில் வேலைவாய்ப்பு இல்லாத உறுப்பினராக இருந்தல், வயோதிப, நோயாளியான பெற்றோர் அல்லது ஊனமுற்ற உறுப்பினர்கள் உள்ள குடும்பத்தில் வேலைவாய்ப்பு இல்லாத உறுப்பினராக இருந்தல், விண்ணப்பிக்கும் பிரதேசத்தில் வசிப்பராக இருந்தல் உள்ளிட்ட தகைமைகள் கோரப்பட்டுள்ளன.

விவசாய உற்பத்தியாளர், பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவை உதவியாளர், மக்கள் சுகாதார மேம்பாட்டு உதவியாளர், , அனர்த்த முகாமைத்துவ உதவியாளர், சுற்றாடல் முகாமைத்துவ உதவியாளர், விற்பனைச் சேவை உதவியாளர், போக்குவரத்து நடவடிக்கை உதவியாளர், கணினி தகவல் தொழில்நுட்ப உதவியாளர், போதைப் பொருள் நிவாரண நடவடிக்கை உதவியாளர், சமையலாளர், உணவு சாலை விடுதியாளர், சுற்றுலா, தோட்ட உதவியாளர், விளையாட்டு நிறுவன உதவியாளர், தச்சுத் தொழிலாளர் மற்றும் உதவியாளர், ஆடைகள் தைப்பவர், மேசன் மற்றும் உதவியாளர், ஒப்பனை அலங்கார நிலைய உதவியாளர், மின்சார தொழில்நுட்ப உதவியாளர், சாரதி மற்றும் சாரதி உதவியாளர், மிருகப் பராமரிப்பு உதவியாளர், எரிபொருள் நிரப்பு நிலைய உதவியாளர், வலை மற்றும் மீன் பிடி உபகரணங்கள் உதவியாளர், ஆயுதம் தரிக்காத பாதுகாப்புச் சேவையாளர், சிறுவர் பராமரிப்பு அபிவிருத்தி உதவியாளர், பொருத்துநர் (வெல்டிங்) உதவியாளர், வீடு பராமரிப்பு, நலன்புரி மற்றும் பராமரிப்புச் சேவை ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (க-159)

# மின் தடை

யாழ்ப்பாணம், ஜன.22

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை **யாழ்ப்பாண மாவட்டத்தில்** கொழும்புத்துறை ஒரு பகுதி, நெடுங்குளம் ஒரு பகுதி, உதயபுரம், மணியம்தோட்டம், மணியம் தோட்டம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் -

**வவுனியா மாவட்டத்தில்** மகாறம்பைக்குளம் பி.எஸ்.சி.பகல அளுத்வத்த கிராமம், சாளம்பைக்குளம், மதவுவைத்தகுளம், தவசிக்குளம், லக்ஸபானா வீதி, பண்டாரிக்குளம், பறயனாளங்குளத்திலிருந்து முகத்தாங்குளம் வரைக்கும், மனிக்பாம் ஆகிய இடங்களிலும்-

**மன்னார் மாவட்டத்தில்** செம்மண்தீவிலிருந்து நானாட்டான் வரை, இராசமடு, இருவிட்டான், அச்சங்குளம், பட்டி கடை நானாட்டான் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)



# மகேந்திரன் தொடர்பாக சிங்கப்பூருடன் பேச்சு!

கொழும்பு, ஜன. 22

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தொடர்பாக சிங்கப்பூருடன் தொடர்ந்து பேச்சு இடம்பெற்று வருவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

மத்திய வங்கி பிணை முறிகள் மோசடி தொடர்பான விசாரணைக்காக மகேந்திரனை ஒப்படைக்குமாறு இலங்கை அரசு சிங்கப்பூரிடம் கோரியுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்ற ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான சந்திப்பில் பேசிய பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, மகேந்திரனை ஒப்படைப்பதற்கு உரிய வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும், அந்த செயல்முறை இன்னும் நடந்து கொண்டிருக்கிறது என்றும் கூறினார்.

அர்ஜுன மகேந்திரனை ஒப்படைக்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையுழுத்திட்ட ஆவணங்கள் கடந்த ஆண்டு சிங்கப்பூரில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் ஊடாக சிங்கப்பூர் அரசிடம் ஒப்படைக்கப்பட்டன.

மத்திய வங்கி மோசடி தொடர்பாக கடந்த ஆண்டு ஜூன் மாதம் சட்டமா அதிபரால், அர்ஜுன மகேந்திரன் மற்றும் 9 பேருக்கு எதிராக நிரந்தர உயர்நீதிமன்ற விசாரணைக்கு முன் குற்றச்சாட்டுகளை தாக்கல் செய்தார். பின்னர் மத்திய வங்கி மோசடி தொடர்பாக மகேந்திரனைக் கைது செய்ய நிரந்தர உயர் நீதிமன்றம் பிடியாணை உத்தரவை பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# புகழ்பூத்த அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம்.ஜிப்ரி மறைவு!

கொழும்பு, ஜன. 22

சிரேஷ்ட அறிவிப்பாளரும் ஊடகவியலாளருமான கல்முனையைச் சேர்ந்த அல்ஹாஜ் ஏ.ஆர்.எம்.ஜிப்ரி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தனது 60ஆவது வயதில் நேற்றுமுன்தினம் இரவு காலமானார்.

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் கல்வி பயின்று, குண்டசாலை விவசாயக் கல்லூரியில் டிப்ளோமா பெற்ற புகழ்பெற்ற விஞ்ஞானப் பாட ஆசிரியரான இவர் களுத்துறை ஜீலான் மத்திய கல்லூரி, தொடவத்தை அல் பஹ்ரியா பாடசாலை ஆகிய வற்றில் அதிபராகவும் கடமையாற்றி இருந்தார்.



நாடு தழுவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பத்து அதிபர்களில் இவரும் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இலங்கை வானொலியில் அல்லியின் ஹலோ உங்கள் விருப்பம், பாஹிமின் பரவசப் பயணம், அறிவுக் களஞ்சியம் போன்ற நிகழ்ச்சிகள் வாயிலாக நேயர்களின் விருப்பத்துக்குரிய அறிவிப்பாளராகத் திகழ்ந்த ஏ.ஆர்.எம்.ஜிப்ரி, நாடு தழுவிய ரீதியில் பொது அறிவு, விஞ்ஞானம் சார்ந்த விடயங்களைப் போதிப்பவராகவும் இருந்து வந்தார்.

வானொலியின் சிறந்த செய்தி வாசிப்பாளராகவும் திகழ்ந்து மக்கள் மனதில் இடம்பிடித்தார்.

அரசியல், சமூக சேவையில் ஈடுபாடு கொண்ட இவர் பல அமைப்புக்களின் முக்கிய பதவிகளையும் வகித்துள்ளார்.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திலும் நீண்ட காலம் செய்தி வாசிப்பாளராகவும், நிகழ்ச்சி முன்வைப்பாளராகவும் கடமையாற்றிய அனுபவமுள்ள இவர் பத்திரிகைத் துறையிலும் தனது பங்களிப்பை வழங்கினார். (ம-22)




# கற்றல் கருவிகள் கையளிப்பு

முல்லைத்தீவு, ஜன.22

முல்லைத்தீவு முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலையில் கல்வி கற்றுவரும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மறைந்த கந்தையா கதிரவேலுவின் 9 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு 30 மாணவர்களுக்கு நேற்று முன்தினம் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-222)

# தென்னை மரம்



அரசர் கிருஷ்ணதேவராயரின் அவைக்கு ஒரு நபர் வந்தார்.

அவர் அரசரிடம், "அரசே! என்னுடைய வயலும் பக்கத்து வீட்டுக்காரர் வயலும் அருகருகில் உள்ளன. இரண்டுக்கும் இடையில் உள்ள வரப்பில், ஒரு தென்னை மரம் உள்ளது. பக்கத்து வீட்டுக்காரர் அதை எனக்கு விற்று விட்டார். நான்தான் அதை நன்றாகப் பராமரித்து வருகிறேன். இன்று அவர் என்னைத் தேங்காய் பறிக்கக் கூடாது என்றார். இப்போது அவர் தன் முடிவை மாற்றிக் கொண்டு விட்டாராம். மரம் திரும்ப அவருக்கு வேண்டுமாம்" என்று முறையிட்டார்.

அதைக் கேட்டு அவையினர் அனைவரும் திடுக்கிட்டனர். அமைச்சர் சொன்னார். "அந்த மனிதாபிமானம் அற்ற மனிதரைக் கைது செய்து வந்து சிறையில் அடைக்க வேண்டும்" என்று.

அதற்குள் சேனாதிபதி, அந்த நபரைக் கைது செய்து வரத் தயாராகி விட்டார்.

அப்போது அரசர் "என்ன செய்யலாம்?" என்று கேட்பதைப் போல் தெனாலிராமனைப் பார்த்தார்.

தெனாலிராமன் புரிந்து கொண்டு, "தாங்கள் அனுமதி தந்தால், இதற்கான தீர்வை நாளைக்குத் தள்ளி வைத்துக் கொள்ளலாம்" என்றார்.

அரசர், அந்த நபரிடம், "நாளைக்கு உன் பக்கத்து வீட்டுக்காரனையும் அழைத்து வா" என்று அவனை அனுப்பி விட்டார். மறுநாள் அந்த நபரும், பக்கத்து வீட்டுக்காரனும் சபைக்கு வந்தனர். இருவரிடமும் நன்கு விசாரித்த பிறகு தெனாலிராமன் சொன்னார். "அப்படியானால் நீ உன் மரத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ள விரும்புகிறாய் இல்லையா?" என்றார். அதற்கு அவன், "ஆம் ஐயா!" என்றான்.

"சரி, நீ அவனுடைய பணத்தைத் திரும்பக் கொடுத்து விடு" என்றார் தெனாலிராமன்.

அவனும் பணத்தை எடுத்துக் கொடுத்து விட்டான்.

சபையினருக்கு ஒன்றும் புரியவில்லை. "தெனாலி ஏன் இப்படியெல்லாம் செய்கிறார்?" என்று திகைத்தனர்.


பிறகு தெனாலி, மரத்தை வாங்கியவரிடம், "சரி இன்றிலிருந்து அந்த மரம் உன்னுடையது இல்லை" என்றார். அந்த மனிதரிடம் ஏமாற்றம்.

அப்போது தெனாலிராமன் தொடர்ந்து. "இன்னொரு விஷயம் அந்த மரம் நீ வாங்கும் போது எப்படி இருந்ததோ அப்படியே அதை நீ திரும்பக் கொடுத்து விட வேண்டும்" என்று கூறி விளக்கினார்.

"அதாவது நீ மரத்தை அவரிடம் வாங்கும்போது அம்மரம் காய்க்கத் தொடங்கவில்லை. ஆகவே, அதைத் திரும்ப ஒப்படைப்பதற்கு முன்பு எல்லாக் காய்களையும் பறித்துக் கொண்டுவிடு" என்றார் வாங்கியவரிடம்.

திரும்பப் பெற்றவரிடம், "காய் இல்லாத மரத்தைத் தானே நீ விற்றாய்? ஆகவே, என்றைக்கும் காயில்லாத மரம்தான் உன்னுடையது. அதில் இனிமேல் காய்க்கும் காய்கள் எல்லாம் மரத்தைத் திரும்பக் கொடுத்த வரையே சேரும் அதை அவர் பறித்துக் கொள்ள அவ்வப் போது நீ அனுமதிக்க வேண்டும் தடுக்கக் கூடாது; நீயும் பறித்துக் கொள்ளக் கூடாது" என்றார். தெனாலியின் இத்தீர்ப்பை அரசர் ஆமோதித்தார். திரும்பப் பெற்றவன் முகத்தில் ஏமாற்றம்.

புகார் கொடுத்த நபர் மகிழ்ச்சியுடன் எல்லோரையும் குறிப்பாக, தெனாலிராமனை வணங்கி விட்டு விடை பெற்றுச் சென்றார்.



படத்தில் ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. கண்டு பிடிப்போம்...!



## தெரிந்துகொள்வோம்

1. வயிற்றில் பல் இருக்கும் உயிரினம் நண்டு
2. மூக்கில் பல் இருக்கும் விலங்கு முதலை.
3. கண் இல்லாத உயிரினம் மண்புழு.
4. ஈபிள் டவரின் உயரம் 300 அடி
5. வாத்தை தேசிய பறவையாகக் கொண்ட இரு நாடுகள் கனடா, ஜாவா.
6. உலகின் மிகப்பெரிய உயிரியல் பூங்கா அமெரிக்காவில் உள்ள `டொராண்டோ உயிரியல் பூங்கா'
7. திராட்சை மலரை தேசிய மலராகக் கொண்டுள்ள நாடு - சீனா
8. உலகில் அதிக அருங்காட்சியங்கள் உள்ள நாடு ஜேர்மனி
9. காகிதம் கண்டுபிடிப்பதற்கு முன்பு பட்டங்கள் பட்டுத் துணியால் செய்யப்பட்டன
10. மனித உடல் 60 சதவீதம் நீரால் ஆனது.



## ஆட்டுக்குட்டி

துள்ளி வரும் ஆட்டுக்குட்டி
தாவி வரும் ஆட்டுக்குட்டி
பள்ளி செல்ல வருவாயோ?
பாடம் சொல்லித் தருவாயோ?
கள்ளம் இல்லை உன் மனதில்கபடம் இல்லை உன்னிடத்தில்
பள்ளம் மேடு வந்தாலும்
பாய்ந்து ஓடும் ஆட்டுக்குட்டி தொல்லை இல்லா ஆட்டுக்குட்டிதோல் கறுத்த ஆட்டுக்குட்டி
சொல்லைக் கேட்டு வீட்டையேசுற்றி வருமே ஆட்டுக்குட்டி.

STUDY , WORK & SETTLE IN
CANADA
GERMANY
FRANCE
LATVIA
EUROPE
செல்ல வழிகாட்டல்
BUSINESS ADMINISTRATION
JOURNALISM & MEDIA
HUMAN RESOURCES
TOURISM & HOSPITALITY
BANK BALANCE
(NO IELTS)
SCHENGAN VISA
FULL IN ENGLISH MEDIUM
ROYAL EDUCATION SERVICE
128 JAMPETTAH STREET, COLOMBO 13
0777 911 649 / 0777 216 291
குறைந்த செலவில். விரைவில் பயணம்.

## இலங்கையை...


நேற்று அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய ஜனாதிபதியாகக் கோத்தாபய ராஜபக்ச பதவியேற்று இரண்டு மாதங்கள் கடந்துள்ளன. அவர் பொருளாதார ரீதியாகப் பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார் என்று கூறப்பட்டாலும், இன ரீதியாகப் போர்க் குற்றங்களில் ஈடுபட்ட பலருக்கு உயர் பதவிகளையும், வாய்ப்புளையும் வழங்குவதையிட்டு நாங்கள் மிகக் கவலையடைகின்றோம்.

முக்கியமாக இராணுவத் தளபதியாக இருந்த சவேந்திர சில்வாவுக்கு முப்படைகளின் பிரதானி என்ற பதவியையும், கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் கடற் படை அதிகாரிக்கு பதவியுயர்வையும் அவர் வழங்கியுள்ளார். மிருசுவிலில் பொதுமக்கள் 8 பேரின் குரல் வளைகளை நெரித்துக் கொலை செய்தமைக்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ அதிகாரிக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியிருக்கின்றார். ஜனாதிபதி தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இவற்றை மிக மோசமான, நடவடிக்கைகள் என்றே பார்க்க முடியும்.

எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இது தொடர்பாக எம்மால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டு, இந்த விடங்களை விசாரணை செய்யுமாறு வலியுறுத்தவுள்ளோம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு ஏற்றுக் கொண்ட விடயங்களை இதுவரை செய்ய மறுத்து வருவதால் இந்த விடயத்தை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மற்றும் பாதுகாப்புச் சபை ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்பதையும் வலியுறுத்துவோம்- என்றார். (ஏ-106)



# மறக்கப்பட்ட விடயமா தமிழர் பிரச்சினை?

சேரலாதன்

தமிழர்களுக்கு அரசியற்தீர்வு என ஒன்றுமே தேவையில்லையென அரசின் இராஜாங்க அமைச்சரொருவர் கூறியமையை என்னவென்று சொல்வதெனத் தெரியவில்லை.

தமிழ் மக்கள் அரசியல் தீர்வு தொடர்பாகக் கவலைப்படவில்லையெனவும், தமது வயிற்றுப்பாடு சம்பந்தமாகவே கவலையும், விரத்தியும் கொண்டுள்ளனர் எனவும் அவர் தமிழ் மக்களை எள்ளி நகையாடும் வகையில் கூறியுள்ளமை தமிழ் மக்களை கோத்தாபய அரசு எந்த அளவுக்குக் கணித்து வைத்துள்ளது என்பதை எடுத்துக்காட்டிவிட்டது. அவ்வாறாயின் தமிழ் இளைஞர்கள் சோற்றுக்காகவா ஆயுதமேந்திப் போராடித் தமது இன்னுயிர்களை இழந்தார்கள்? என்ற வினா தானாகவே எழுகின்றது.

அரசியல் தீர்வு ஒரு புறமிருக்க காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம், இன்னமும் தமது சொந்த இடங்களில் மீள குடியமர முடியாத நிலையில் அவலங்களுக்கு உள்ளாகும் மக்களின் பரிதாப நிலை, அதிகாரங்கள் வழங்கப்படாதமையால் பெயரளவில் மட்டுமே செயற்படுகின்ற மாகாண சபைகள், தமிழர் பிரதேசங்களில் இடம்பெறும் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள், தமிழர்களின் மண்ணில் திடீரென முளைக்கின்ற புத்த விகாரைகள் அபிவிருத்தியில் பின்தங்கி நிற்கும் தமிழர் பகுதிகள், தமிழ்ப் பகுதிகளில் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் வணக்கத்தலங்கள் இவற்றுக்கெல்லாம் அரசின் பதில்கள்தான் என்ன? இவை யாவும் பிரச்சினைகள் இல்லையா?

**ரணில் அரசு பரவாயில்லை**

ரணில் அரசாவது தமிழர்களுக்குப் பிரச்சினைகள் உள்ளமையை ஏற்றுக்கொண்டு அவற்றுக்குத் தீர்வு வழங்கப்படுமென உறுதியளித்தது. வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனாலும் பிரச்சினைகள் இருக்கின்றமையை ஒப்புக்கொண்டதே பெரிய விஷயம்தான். ஆனால் கோத்தாபய அரசு தமிழர்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன என்பதையே ஏற்க மறுக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் கோத்தாபயவுக்கு அதிகளவில் வாக்குகளை அளிக்காதுவிட்டாலும் இந்த நாட்டின் குடிமக்கள் என்ற வகையில் அவர்களுக்கும் கோத்தாபயவே ஜனாதிபதியாக உள்ளாரென்பதை எவருமே மறுத்துவிட முடியாது. அந்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டிய பொறுப்பும் கோத்தாபயவுக்கே உள்ளது. இதை அவர் தட்டிக் கழித்துவிட முடியாது. ஆனால் அவரது அரசில் பதவிகளை வகிப்பவர்கள் தமிழர்களுக்குப்பிரச்சினையே இல்லை என்றவாறு கூறுகின்றமை கோத்தாபய தலைமையிலான அரசின் கருத்தாகவே எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இது கோத்தாபயவின் நற்பெயருக்கு நிச்சயமாகக் களங்கத்தை ஏற்படுத்தவே செய்யும்.

**பேச்சு சாத்தியமா?**

இதேவேளை பேச்சு நடத்துவதற்கென சம்பந்தனுக்கு கோத்தாபய அழைப்பு விடுத்துள்ளனர் என கூட்டமைப்பின் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன் கூறினார் என ஊடகமொன்றில் தகவல் வெளியாகியுள்ளது.

ஆனால் என்ன விடயங்கள் தொடர்பாகப் பேச்சு இடம்பெறுமென்ற விவரங்கள் தெரியவரவில்லை. கோத்தாபயவின் அழைப்பை ஏற்று சம்பந்தன் செல்வாரென எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனென்றால் நாட்டின் தலைவர் என்ற வகையில் கோத்தாபயவுடன் பேசுவதன் மூலமே தமிழர்களுக்கு எதையாவது பெற்றுக்கொள்ள முடியுமென்பதை சம்பந்தன் நன்கறிவார்.

ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்தை வரையறை செய்து அதற்குள் பேச வேண்டியவற்றைப் பேசி பெறவேண்டியவற்றைப் பெற்றுக் கொள்வதே புத்திசாலித்தனமானது.

ஏனென்றால் நல்லாட்சி அரசுடன் நீண்ட ஆண்டுகளாகப் பேச்சில் ஈடுபட்டதையும் இறுதியில் ஏமாற்றப்பட்டதையும் சம்பந்தன் மறந்திருக்க மாட்டார். அதுவும் தமிழர்களுக்குப் பிரச்சினையே இல்லையென தற்போதைய அரசில் உள்ளவர்கள் கூறிவரும் நிலையில் எதைப் பற்றிப் பேசவேண்டும் என்பதை முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்ற பிரச்சினைகள் தொடர்பாக நன்கு சிந்தித்துப் பேச்சில் ஈடுபட வேண்டும். ஆனால் அரசதரப்பு காலத்தை இழுத்தடிப்பதற்கு ஒருபோதுமே அவகாசத்தை வழங்கக் கூடாது.

ஜனாதிபதியைச் சுற்றியிருப்பவர்கள் இனவாதம் பேசுவதிலும் அதன் மூலமாக சிங்கள மக்களின் ஆதரவைத் திரட்டுவதிலும் கவனமாகச் செயற்பட்டு வருகின்றார்கள், இனவாதமே இவர்களின் ஒரே அரசியல் மூலதனமாகவும் காணப்படுகின்றது. இதைவிட்டால் இவர்களுக்கு வேறு வழியேதும் இல்லை. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கைது செய்ய வேண்டுமெனக் குரல் கொடுத்தவர்களும் இந்த நாட்டில் இருக்கத்தான் செய்கின்றனர். அரசியல்வாதிகள் மட்டுமல்லாது மத குருமார்களும் கூட இனவாதத்தைப் பேசுவது இந்த நாட்டின் சாபக்கேடாக மாறியுள்ளது.



நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற சகோதர உணர்வு அனைவரிடமும் தோன்றாதவரையில் நல்லிணக்கமும், தேசப்பற்றும் ஒருபோதுமே ஏற்பட்டுவிடாது. முதலில் நாட்டிலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆட்சியாளர்கள் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும்.

இதில் பாரபட்சமோ அல்லது பாசாங்குத்தனமோ இருத்தல் ஆகாது. இன ரீதியான வேறுபாடுகளும் இருக்கக் கூடாது.

சிங்களவர்கள், தமிழர்கள் முஸ்லிம்கள் என்ற அனைத்து இனத்தவர்களும் இந்த நாட்டின் குடிமக்களே என்ற எண்ணம் மேலோங்கிக் காணப்பட்டால் இனப்பிரச்சினை என்பதே காணாமல் போய்விடும்.

ஆனால் இதைக் கூடப் புரிந்து கொள்வதற்கு இங்குள்ள சிலர் சிரமப்படுகின்றனர். இவர்களின் கண்களுக்குத் தமிழர்களின் பரிதாப நிலை தெரியாமல் போனதில் ஆச்சரியப்படுவதற்கும் ஒன்றுமில்லை.

தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாமல் இந்த நாட்டில் அமைதியையும், அபிவிருத்தியையும் ஒருபோதுமே எதிர்பார்க்க முடியாது. அதைவிடுத்து தமிழர்களுக்குப் பிரச்சினைகள் இல்லையெனப் பொய்யுரைத்து மற்றவர்களை ஏமாற்ற நினைப்பதால் தேவையற்ற பிரச்சினைகளுக்குத்தான் முகம் கொடுக்க வேண்டிய நிலை உருவாகிவிடும். இதைச் சரியாகப் புரிந்து கொள்ளத்தக்கதொரு தலைவர்தான் இன்று இந்த நாட்டுக்குத் தேவை.

ஆசிரியருக்கான கடிதம்

## பசுவதையை ஒழிக்க எழுவோர் வாரீர்!

இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சி நடந்த காலம், யாழ்ப்பாணத்தில் கொலையும் புலாலும் மறுத்த சைவ மக்கள் வாழ்ந்த காலம். போர்த்துக்கேயப் பறங்கியர்க்கு உணவாக அனைவரும் நாளுக்கொரு கொழுத்த பசுவைக் கொடுக்க வேண்டிய கொடிய சட்டம்.

இந்த முறைமை நடைமுறைக்கு வந்தபோது பசுக்கொலையாகிய கொடிய பாவம் செய்வதிலும் பார்க்கப் பரதேசம் போவதே மேல் எனக் கருதி இரவோடிரவாகக் கடல் கடந்து இந்தியாசென்றவர் திருநெல்வேலி ஞானப்பிரகாசர்.

அங்கு சிதம்பரம் சேர்ந்து தவமியற்றிச் சிவஞானம் பெற்றுச் சிவகதி சேர்ந்தார்.

பசுக்கொலைக்கஞ்சிப் பரதேசம் போய்ச் சிவகதி பெற்றவர் ஞானப்பிரகாச முனிவர். அத்தகு மகான் வாழ்ந்த சிவபூமியில் வாழும் நாமும் பசுவதையை நீக்கி வாழ்வோம்.

**மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம்**

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# விஷம் கக்குதல் புதிதல்லவே!

ஒரு பெயர்ப்பலகையில் மேல் வரிசையில் இருந்த தமிழை அப்படியே அலேக்காகத் தூக்கி, இரண்டாவது இடத்தில் வைத்ததுதான் வைத்தார். அப்படியே அந்த விவகாரம் பற்றியெரியத் தொடங்கிவிட்டது. தமிழ் அரசியல்வாதிகள் எல்லோரும் வரிசைகட்டிக் கொண்டு விமலை 'வாங்கு வாங்கென்று' வாங்கிக் கொண்டிருக்கிறார். ஆனால் அதைப்பற்றிய எந்தக் கூச்ச நாச்சமுமின்றி, "தமிழுக்கு முதலிடம் கொடுக்க நாமென்ன (சிங்களவர்கள்) முட்டாள்களா?" என்று வேறு பதில் கருத்து சொல்லியிருக்கிறார் விமல் வீரவன்ச. ஆக, இப்படித் தமிழ் அரசியல்வாதிகள் என்ன தான் கத்திக் குளறினாலும், விமல் வீரவன்ச போன்ற இனவாதிகள் ஒருபோதும் மாறப்போவதில்லை என்பது இன்னொரு முறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

விமல் வீரவன்சவின் கடந்த காலத்தை நன்கறிந்தவர்கள், மன்னாரில் திறக்கப்பட்ட பெயர்ப்பலகையில் முதலிடத்தில் இருந்த தமிழை, இரண்டாமிடத்துக்கு கொண்டு வந்ததை ஒரு பொருட்டாகவே எடுக்கமாட்டார்கள். 'காகத்துக்கு கனவிலும் எதையோ கிளறும் நினைப்புப் போல' விமல் வீரவன்சவும் தமிழ் எதிர்ப்பையே 24 மணி நேரத் தொழிலாகக் கொண்டிருப்பவர். அவர் ஜே.வி.பியில் இருந்த காலத்திலும் சரி, அதற்குப் பின்னரும் சரி ஒருபோதும் தமிழ் மொழியின் மீதோ, தமிழ் மக்களின் மீதோ எப்போதும் வெறுப்பை உமிழ்ந்து கொண்டிருப்பவர். ஒரு இடதுசாரித்துவக் கொள்கையைக் கொண்ட ஜே.வி.பி. என்ற கட்சியினூடாக அரசியலுக்குள் நுழைந்த தடயமே அவரிடம் இல்லை. ஒரு முதலாளித்துவச் சிந்தனை கொண்டவராக அவரின் நடை, உடை, பாவனை எல்லாம் இருந்தன; இருக்கின்றன. பாம்பென்றால் அது விஷத்தைக் கக்குவதென்பது விநோதமான எதிர்பாராமல் நடக்கும் விடயமல்ல. அது பாம்பின் இயல்பு. அதேபோலதான் விமலும் இனவாதம் கக்குவது காலம் காலமாகத் தவறாமல் நடந்துவரும் விடயமே.

13 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் ஒன்றாக இணைந்திருந்த வடக்கு கிழக்கைப் பிரிப்பதற்கு ஜே.வி.பி தொடுத்திருந்த வழக்கே முழுக்காரணம். அதன் பின்னணியிலும் இருந்தவர் இதே விமல் வீரவன்ச தான். அவர் எப்போதெல்லாம் வாயைத் திறக்கிறாரோ அப்போதெல்லாம், இனவாதத் தொனியோடு எதையாவது சொல்லாவிட்டால் பத்தியப்படுவதில்லை. இப்படியெல்லாம் தமிழர்களையும், தமிழையும் கொச்சைப் படுத்தும் விமல் வீரவன்ச, சுனாமி அனர்த்தங்களைப் பார்வையிட, அப்போது பிரதமராக இருந்த மஹிந்தவோடு சோடி கட்டிக் கொண்டு, யாழ்ப்பாணம் வந்திருந்தார். வந்தவர்களை விளக்குமாற்றால் வரவேற்று, நன்றாகக் கவனித்தே தமிழ் மக்கள் அனுப்பியிருந்தார்கள். சும்மாவே குரைத்துக் கொண்டிருந்த விமலுக்கு இந்த அவமானம், இன்னும் கோபத்தை மூட்டி விட அதன் பின்னர் கடிக்கவும் தொடங்கியிருந்தார்.

முன்னரை விடவும், இனித்தான் விமல் வீரவன்ச இனவாதியாக பேருருவம் கொள்வதற்காக சூழ்நிலைகள் உள்ளன. மஹிந்த ராஜபக்ச. 2015 இல் தோல்வியுற்று, மெதமுலனவில் உள்ள தன் பூர்வீக இல்லத்துக்கு பெட்டி, படுக்கையோடு இடம்பெயர்ந்த போது, அதுவரை காலமும் அவர் அணியில் இருந்த பலர், மஹிந்தவின் அடிமையாகத் தன்னைப் பிரகடனம் செய்திருந்த மேர்வின் சில்வா போன்றோர் கூட 'அற்ற குளத்து அறு நீர்ப்பறவைகளாக' மைத்திரி பக்கம் பறந்து போய் ஒட்டிக்கொண்டனர். ஆனால், அப்போதும் விமல் வீரவன்ச மஹிந்த அணியை விட்டுப் போகவில்லை. மீண்டும் மஹிந்தவை ஆட்சிக்கு கொண்டுவர ஓடித் திரிந்தார். ஒக்ரோபர் சதிப் புரட்சியின் போதும், விமல் வீரவன்சவே முன்னணியில் நின்றிருந்தார். அதன் பின்னர் கோத்தாபயவை ஜனாதிபதியாக்குவதிலும் விமலின் உழைப்பு காத்திரமானது. இக்கட்டு நேரத்திலும் தம்மோடு நின்றிருந்த விமல் எப்படி வேண்டுமானாலும் ஆடுவதற்கே அனுமதிப்பார்கள். அந்தத் தைரியத்தில் தான் அவர் அடித்தாடத் தொடங்கியிருக்கிறார். நல்ல வேளையாக தமிழை மூன்றாமிடத்தில் வைக்காமல், இரண்டாமிடத்திலாவது விமல் வீரவன்ச வைத்தாரே என்று திருப்திப்பட்டுக் கொள்வதைத் தவிர வேறு தெரிவுகள் இப்போதைக்கில்லை. ஏனெனில் காற்று இப்போது அவர்கள் பக்கம். அவர்கள் வைத்ததே சட்டம்.

# 1315.5 ஏக்கர் வயல் வெள்ளத்தால் பாதிப்பு

**முல்லைத்தீவு,ஜன.22**
**முல்லைத்தீவு மாவட்டத்தில், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில், வெள்ள இடர் காரணமாக 1315.5 ஏக்கர் வயல் நிலங்கள் பாதிப்படைந்துள்ளன. அதனால் 508 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட கமநலசேவை திணைக்கள உத்தியோகத்தரான இராஜரத்தினம் சுகந்தன் தெரிவித்துள்ளார்.**



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான, காப்பறுதி வழங்குவதற்கான செயற்பாட்டைத் துரிதப்படுத்துமாறும், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலரிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.
முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கமநல சேவை நிலையங்களான, முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் கீழ் 883ஏ க்கர் விவசாய நிலங்கள் அழிவடைந்துள்ளதுடன் 313 பேர் பிதிக்கப்பட்டுள்ளனர். அளம்பில் கமநல சேவை நிலையத்தின் கீழ் 107.5ஏக்கர் விவசாய நிலங்கள் அழிவடைந்துள்ளதுடன் 71 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். குமுளமுனை கமநல சேவை நிலையத்தின் கீழ் 218ஏக்கர் வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளதுடன் 72பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோல் கொக்குத்தொடுவாய் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள 107 ஏக்கர் விவசாய நிலங்கள் அழிவடைந்துள்ளன. 52 விவசாயிகளும் பாதிககப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூட்டத்தில் தெரிவித்தார். (க-246)

# 1000 தினச்சம்பளம் எவ்வாறு சாத்தியம்?

## விளக்கம் கோருகிறார் திலகராஜ்

கொழும்பு, ஜன. 22
பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாளாந்த சம்பளம் வழங்குவதற்காக அரசு மேற்கொண்டுள்ள தீர்மானத்தை தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணி வரவேற்பதாக முன்னணியின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய எம்.திலகராஜ் தெரிவித்துள்ளார். தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் முன்னணியின் பொங்கல் விழா நிகழ்வில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசால் மார்ச் முதலாம் திகதி முதல் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்குவதாக அறிவித்தமை வரவேற்கத்தக்கது. பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்புக்கு தடையாக இருந்து வரும் கூட்டு ஒப்பந்தத்தை முற்றாக நீக்கி இனிவரும் காலங்களில் அரசினூடாக சம்பள உயர்வினை வழங்க வேண்டும். இதுவரை காலமும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வுக்கு கூட்டொப்பந்தம் தடையாக இருக்கின்ற நிலையில் ஆயிரம் ரூபாய் அடிப்படை சம்பளமாக எவ்வாறு அரசு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது என்பதனை அறிய மக்கள் ஆவலாக உள்ள நிலையில் அதனை தெளிவுபடுத்த அரசு முன்வர வேண்டும் என்றார். (ம)



# நியமனம்

வவுனியா,ஜன.22
நீர்வழங்கல் வசதிகள் இராஜாங்க அமைச்சின் வன்னி மாவட்ட ஒருங்கிணைப்பு செயலாளராக சங்கரலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.
நீர்வழங்கல் வசதிகள் இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தனது அமைச்சில் வைத்து நேற்றுமுன்தினம் நியமனக் கடிதத்தை வழங்கினார். (ஐ-110)

# இலங்கைக் குப்பைகள் மீண்டும் இலங்கைக்கே

கொழும்பு, ஜன. 22
இலங்கையில் இருந்து மலேசியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பிளாஸ்ரிக் குப்பைகளை மீண்டும் இலங்கைக்கே அனுப்புவதற்கு மலசியா தீர்மானித்துள்ளது.
இது தொடர்பில் மலேசிய அரசின் தரப்பில், இலங்கை உள்ளிட்ட 13 நாடுகள், தங்களது நாட்டுக்கு அனுப்பிவைத்த பிளாஸ்ரிக் கழிவுகள் அடங்கிய 150 கொள்கலன்களை, மீள அனுப்பிவைக்கவுள்ளோம். தமது நாட்டை கழிவுகளை வெளியேற்றும் இடமாக்குவதற்கு சில நாடுகள் மேற்கொள்ளும் முயற்சி கனவு மாத்திரமே. பிளாஸ்ரிக் பொருட்கள் ஏற்றுமதியை சீனா கடந்த 2018ஆம் ஆண்டு நிறுத்தியதை அடுத்து அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இருந்து எமது நாட்டுக்கு அதிக கழிவுகள் வரத் தொடங்கியுள்ளன.
அதற்கமைய 3 ஆயிரத்து 737 மெற்றிக்டொன் பிளாஸ்ரிக் கழிவுகள் அடங்கிய 150 கொள்கலன்களில் பிரான்ஸுக்கு சொந்தமான 43 கொள்கலன்கள், ஐக்கிய அரபு ராஜ்ஜியத்துகக்கு சொந்தமான 42 கொள்கலன்கள், அமெரிக்காவுக்கு சொந்தமான 11 கொள்கலன்களும் அடங்குகின்றன. அத்துடன் எஞ்சிய கொள்கலன்கள் இலங்கை, ஜப்பான், சிங்கப்பூர், போர்த்துக்கல், லித்துவெனியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளால் அனுப்பப்பட்டுள்ளன - என்றார். (ம)

# “எம்மை வாழ விடுங்கள்!”

## மிருசுவில் படுகொலையில் உறவுகளை இழந்த பெண்

யாழ்ப்பாணம்,ஜன.22

“நான் நான்கு பெண் பிள்ளைகளோடு வாழ்கிறேன். அவர்களுக்கு இனி எந்தத் தொந்தரவும் இருக்கக் கூடாது. அவர்களுக்கு ஒரு நிரந்தர அரச வேலையைக் கொடுங்கள்“ என்று இராணுவத்தினரால் 2000 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மிருசுவில் படுகொலையில் கணவர் உட்பட பிள்ளைகளைப் பறிகொடுத்த தாயார் வேண்டுகோள் விடுத்தார்.





யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில், முறைப்பாட்டைக் கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னுடைய கணவர் மற்றும் இரண்டு மகன்களும் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர். படுகொலை செய்தவர் என்று குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளியானவர் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவருக்குப் பொது மன்னிப்பு வழங்கி இந்த அரசு விடுதலை செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அவருக்குப் பொது மன்னிப்பு வழங்கியதில் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் எங்களுக்கு நட்டஈடோ, அல்லது கல்வி கற்றுள்ள என்னுடைய பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்போ வழங்க வேண்டும்.

எங்கள் குடும்பம் இனி மேலாவது கஷ்டங்கள் இல்லாமல் கண்ணீர் இன்றி வாழ வேண்டும். எமக்கான வீட்டுத் திட்டங்கள் கூடக் கிடைக்கவில்லை. அவற்றைத் தந்து உதவ ஆவன செய்ய வேண்டும். 20 வருடங்களாக நாங்கள் அலையாத இடங்கள் இல்லை. எங்களது பிள்ளைகளின் உடைமைகள் கொழும்பு மேல் நீதிமன்றில் உள்ளன. அவற்றைக் கூட எமக்குப் பெற்றுத் தர யாரும் இல்லை- என்றார். (சு-37)









## செயற்பட்டு மகிழ்வோம்; வள்ளுவன் இல்லம் முதலிடம்

கொடிகாமம்,ஜன.22

வரணி இயற்றாலை அ.மி.த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் வித்தியாலய மைதானத்தில் அதிபர் திருமதி. த.ஸ்ரீமோகன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வல்லிபுரம் நடராசா, சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந. திருவாசகம், கௌரவ விருந்தினராக கலைவாணி சனசமூக நிலையத் தலைவர் சி.வேலுப்பிள்ளை, அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வள்ளுவன் இல்லம் முதலாம் இடத்தையும், கம்பன் இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (ஐ-159)

## கோட்டைகட்டியகுளம் ம.வி. மாணவர் சாதனை

முல்லைத்தீவு,ஜன.22

கண்டி நாவலப்பிட்டிய பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற “செயற்பட்டு மகிழ்வோம்” நிகழ்வில் தேசிய மட்டத்தில் கலந்து கொண்ட துணுக்காய் கோட்டைகட்டியகுளம் மகா வித்தியாலயம் தங்கம் மற்றும் வெண்கலப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

பாடசாலையின் தரம் 3 கலவன் அணியினர் தங்கப்பதக்கத்தையும்,தரம் 4 கலவன் அணியினர் வெண்கலப் பதக்கத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். (ஐ-222)






## மெய்வன்மைப் போட்டி

கொடிகாமம்,ஜன.22

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி தயா சக்தி பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கோட்டக் கல்வி பணிப்பாளர் வ.நடராசா, சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சி.சிவதாசன், விஞ்ஞான பாட ஓய்வு பெற்ற ஆசிரியர் திருமதி சாந்தினி பவளகுமாரன் மதிப்புறு விருந்தினர்களாக ம.தவச்செல்வம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஐ-159)

★ ★ ★

கொடிகாமம்,ஜன.22

கச்சாய் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கா.குண்சிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஐ-159)

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

கொடிகாமம்,ஜன.22

போக்கட்டி றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ் வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஐ-159)

★ ★ ★

கொடிகாமம்,ஜன.22

கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலை வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக கணிதபாட ஆசிரிய ஆலோசகர் க.ஸ்ரீகணேசன், கௌரவ விருந்தினர்களாக பளை மத்திய கல்லூரி ஆசிரியர் நா.கேதீஸ்வரன், ஜே/342 கரம்பைக்குறிச்சி கிராம அலுவலர் மோ.பிரகாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஐ-159)

# இனவாதத்தின் தந்தை விமல்!!

## வேலுகுமார் விளாசல்



கொழும்பு, ஜன. 22

இன்றைய நவீன உலகிலும் தான்தான் இன வாதத்தின் தந்தை என்பதை அமைச்சர் விமல் வீரவன்ஸ மீண்டுமொருமுறை உறுதிப் படுத்தியுள்ளாரென கண்டி மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித் தார்.

இவர்போன்ற அரசியல்வாதிகள்தான் நாட்டில் இனவாதத்துக்கு தூபமிட்டு இன ஐக்கியத்துக்கு சாபக்கேடாக மாறியுள்ள னர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னாரில் தமிழ் மொழிக்கு முன்னு ரிமை வழங்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்ட பெயர்ப்பலகையை நீக்கிவிட்டு, சிங்கள மொழிக்கு முதலிடம் வழங்கியமையைக் கண்டித்து வேலுகுமார் நேற்று செவ் வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக் கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

"மன்னாரிலுள்ள பனந்தும்பு உற்பத்தி நிலையத்தை அமைச்சர் விமல் வீர வன்ஸ கடந்த 18ஆம் திகதி திறந்து வைத்தார்.

இதன்போது - திரைநீக்கம் செய்யப்பட்ட பெயர்ப்பலகையில் தமிழ் மொழியே முதலில் இருந்தது. இதனைக்கண்டு கொதிப்படைந்த விமல் வீரவன்ஸ, குறித்த பெயர்ப் பலகையை உடன் நீக்கி விட்டு, சிங்கள மொழிக்கு முன்னுரிமை வழங்குமாறு பனை அபிவிருத்திச் சபை யின் தலைவருக்கு கட்டளை பிறப்பித் துள்ளார். இதன்படி தற்போது தமிழர் தாயகத்தில் தமிழ் மொழி இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

வழமையாக வாக்குவேட்டைக்காக சிங் கள, பௌத்த மக்களின் மனங்களில் இனவாதத்தை விதைத்து அவர்களின் உணர்வுகளைத் தூண்டிவிட்டு அரசியல் நடத்தும் விமல் வீரவன்ஸ, தற்போது இதனை வடக்கிலும் செயற்படுத்த ஆரம் பித்துள்ளார்.

அவரின் இந்த குரோதச்செயலை ஒரு போதும் நாம் அனுமதிக்கமாட்டோம். வன்மையாகக் கண்டிப்பதுடன் இது தொடர்பாக நாடாளுமன்றத்திலும் கேள்வி எழுப்புவோம்.

இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடிய ரசின் அரசமைப்பில் தமிழ் மொழியும் அரச கரும மொழியாக ஏற்றுக்கொள் ளப்பட்டுள்ளது. அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாகமொழி யாக தமிழைப் பயன்படுத்துவதற்கும் சட்டரீதியாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள் ளது.

எனவே இவ்விரு மாகாணங்களிலுள்ள அரச திணைக்களங்கள், நிறுவனங்க ளில் தமிழுக்கு முன்னுரிமை வழங்குவதே ஏற்புடைய நடவடிக்கையாகும். கடந்த காலங்களில் இந்த நடை முறையே பின் பற்றப்பட்டு வந்தது.

இந்நிலையிலேயே தமிழ் பேசும் மக்க ளுக்கு அரசமைப்பு ரீதியாக வழங்கப் பட்ட உரிமைகளைக்கூட கோத்தாபய தலை மையிலான அரசு பறிக்க முற்படு கின் றது. சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழி யில் தேசிய கீதம் இசைப்பதற்கு தடை போட்டவர்கள் தற்போது தமிழ் மொழி யில் பெயர்ப்பலகை வைப்பதற்கும் தடை போடுகின்றனர்" - என்றுள்ளது. (ம)

# அபேசேகர பிணையில்!



கொழும்பு. ஜன. 22

புத்தளம் மாவட்ட ஐக்கி யத் தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப் பினர் சாந்த அபேசேக ரவை பிணையில் விடு தலை செய்யுமாறு சிலாபம் மேல் நீதி மன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

பிணை நிபந்தனையை மீறிய குற்றச் சாட்டின் பேரில் புத்தளம் மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் சாந்த சிசிர குமார அபேசேகர கைது செய்யப்பட்டு நேற்று வரை 3 மாதங்களுக்கு மேலாகத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தார்.

கடந்த 2004ஆம் ஆண்டு சிலாபம் நகரில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றின் போது துப்பாக்கி மற்றும் தோட்டாக் களை வைத்திருந்தமை தொடர்பாக சிலாபம் மேல் நீதிமன்றத்தில் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த அபே சேகரவுக்கு எதிராக வழக்கு தொடரப்பட் டிருந்தது.

2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி அவருக்குப் பிணை வழங்கப்பட் டதுடன், பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 9 மணிக்கும் 12 மணிக் கும் இடைப்பட்டதொரு நேரத்தில் சிலா பம் பொலிஸ் நிலையத்தில் கையொப் பம் இடவேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டிருந்தது.

எனினும், 2018ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி பிரதிவாதியின் தரப் பினரால் சிலாபம் மேல் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்த கோரிக்கைக்கு அமைய, வாராந்தம் கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தனை தளர்த்தப் பட்டு, ஒவ்வொரு மாதத்திலும் கடைசி ஞாயிற்றுக்கிழமை சிலாபம் பொலிஸ் நிலையம் வந்து கையொப்பமிட வேண் டும் என நீதிமன்றம் அறிவித்திருந்தது.

ஆனால், சந்தேக நபர் நிபந்தனையை மீறியிருக்கிறார் என நீதிமன்றத்தின் கவனத்திற் கொண்டுவரப்பட்ட நிலையி லேயே அவர் ஒக்டோபர் 10ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. (ம)





# மீண்டும் மத்தள!

கொழும்பு. ஜன. 22

மத்தளசர்வதேசவிமான நிலையத்தின் செயற்பாட்டை மீண்டும் ஆரம்பிப் பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள் ளன.

அதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்ஷவின் உத்தரவின் பேரில் ஒரு சிறப்புத் திட்டம் முன்னெடுக்க ப்பட்டுள் ளதாக விமான நிலைய மற்றும் விமான சேவையின் துணைத் தலை வர் ரஜீவசிறி சூரியாராச்சி தெரிவித் தார்.

அதற்கமைய இந்த விடயம் தொடர் பாக எதிர்வரும் பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி விமானம் மற்றும் சுற்று லாத் துறைகளின் பிரதிநிதிகளுடன் சிறப்புக் கலந்துரையாடல் இடம்பெற வுள்ளது. அத்துடன் மத்தள விமான நிலையத்தைப் பயன்படுத்த விமான நிறுவனங்களை ஊக்குவிக்கப் பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள் ளன எனவும் ரஜீவசிறி சூரியாராச்சி தெரிவித்தார். (ம)

# மருத்துவர்களை நியமிக்க கோரிக்கை



முல்லைத்தீவு, ஜன.22

முல்லைத்தீவு மாவட்டத் தில் நிலவும் மருத் துவர் வெற்றிடங் களை நிரப்புவது தொடர்பில் கூடிய கவனம் செலுத்து மாறு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரை ராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள் ளார்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேச அபிவிருத்திக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

முல்லைத்தீவு உண்ணாப்பிலவு மருத்துவமனையில் மருத்துவர் வெற் றிடம் நிலவுகிறது. இதனால் மருத்துவ மனைக்கு வருகின்ற நோயாளர்கள் பெரும் இடர்பாடுகளுக்கு முகங்கொ டுக்கின்றனர்.

அதேவேளை முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையான மாஞ்சோலை மருத்துவமனையில், 60 மருத்துவர் கள் பணியாற்ற வேண்டிய நிலையில், வெறுமனே 28 மருத்துவர்களே பணி யாற்றுகின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் மருத்துவர் பற்றாக்குறை காரணமாக அதிகளவான இறப்புச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

எனவே நாடாளுமன்ற உறுப்பினர் கள், இது தொடர்பில் உரியவர்களு டன் பேசி மாவட்டத்தில் மருத்துவர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அவர் கூட்டத்தில் கோரிக்கை விடுத்தார். (சு-246)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

மன்னார்,ஜன.22

மன்னார் பிரதேச செயலகத் தின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டது.

மன்னார் பிரதேச செயலகத் தில் டெங்கு நோயைக் கட்டுப் படுத்துவது தொடர்பான கலந் துரையாடல் அண்மையில் பிரதேச செயலாளர் மா.பிரதீ பன் தலைமையில் நடை பெற்றது.

இக் கலந்துரையாடலில் மன் னாரில் டெங்கு நுளம்புகள் அதிகம் உள்ளன என அடை யாளம் காணப்பட்ட மன்னார் சின்னக்கடைப் பகுதியில் கடந்த சனி மற்றும் ஞாயிற் றுக்கிழமைகளில் பிரதேச செயலக உத்தியோகத்தர்க ளால் துப்புரவுப் பணி மேற் கொள்ளப்பட்டது. (ஜ-213)

# மழைக்கு வாய்ப்பு



கொழும்பு, ஜன. 22

நாட்டின் தென்மேற்குப் பகுதியிலும் கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங் களிலும் மழையுடனான வானிலையில் இன்று சிறிய அதிகரிப்பு ஏற்படும் என எதி பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளியிட் டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங் களிலும் ஹம்பாந்தோட்டை மற்றும் மாத் தளை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வடக்கு மாகாணத்தில் சிறிதளவான மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் பல இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சப்ரகமுவ மாகா ணத்திலும் களுத் துறை மற்றும் காலி மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மல்லி மீற்றருக்கும் அதி கமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க் கப்படுகின்றது.

மன்னார், புத்தளம் மற்றும் ஹம்பாந் தோட்டை மாவட்டங்களில் காற்றின் வேகமா னது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சப் ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்ட மான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைக ளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக் கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன் னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்ப டுகின்றார்கள் - என்றுள்ளது. (ம)

# மணல் அகழ்வுக்கு முற்றாகத் தடை



முல்லைத்தீவு,ஜன.22

முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்னும் ஓரிரு தினங்களில், சட்ட விரோத மணல் அகழ்வுச் செயற்பாடு முற்றாகக் கட்டுப்படுத்தப் படும் என்று மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத் திக் குழுக் கூட்டத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் சட்ட விரோத மண்ணகழ்வுச் செயற்பாட் டைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் விசேட கூட்டத்தை நடத்தவேண்டு மெனத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைவாக முல்லைத்தீவு மாவட்டச் செயலக மாநாட்டு மண்ட பத்தில், சட்டவிரோத மணல் அகழ் வைக்கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் பொலிஸார் மற்றும் இராணு வத்தினர் இணைந்து மணல் அகழ்வை மாவட்டத்தில் முற்றாகக் கட்டுப்படுத்துவதெனத் தீர்மானிக்கப் பட்டது.

கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவர் ச.கனகரத்தினம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்க ளானதிருமதி.சாந்தி சிறீஸ்கந்தராசா, காதர் மஸ்தான், பிரதேச சபைத் தவி சாளர்கள், முல்லைத்தீவு மாவட்டச் செயலர், மற்றும் பிரதேச செயலர் கள், ஒவ்வொரு பிரதேசங்களுக்கு மான பொலிஸ் பொறுப்பதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், மற்றும் கனியவளத் திணைக்கள அதிகாரி கள்உள்ளிட்டபல்வேறுஅரசதிணைக் கள அதிகாரிகள் கலந்து கொண்ட னர். (க-246,19)

## கட்டுப்பாட்டை இழந்த கூலர் தடம்புரண்டது



மன்னார்,ஜன.22

கழிவு மீன்களை ஏற்றி வந்த கூலர் வாகனம், மன்னார் பிரதான பாலத்தில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. விபத்தில் காயமடைந்த வாகனத்தின் சாரதி உடனடியாக மீட்கப்பட்டு மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க் கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று முன்தினம் இரவு மீன் கழிவுகளை ஏற்றிக்கொண்டு மன்னார் நோக்கிச் சென்ற கூலர் வாகனமே பிரதான பாலத்தில் கட்டுப் பாட்டை இழந்து தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மன் னார் பொலிஸ் நிலைய வீதிப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டனர். (க-56,213)

## சைக்கிள்கள் கையளிப்பு




முல்லைத்தீவு,ஜன.22

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் இருவருக்கு கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

வெளிச்சம் நிறுவனத்தின் ஊடாக சுவிஸ் நாட்டில் வசிக் கும் பத்மநாதன் மாணிக்கம் தனது 44 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த உதவியை அண்மையில் வழங்கினார். (ஐ-222)

## பிரதேச பொங்கல் விழாவும் விவசாயிகள் கௌரவிப்பும்



மன்னார்,ஜன.22

மாந்தை மேற்கு பிரதேச செயல கத்தின் பொங்கல் விழாவும், விவசாயிகள் கௌரவிப்பும் நேற்று முன்தினம் முற்பகல் 9 மணிக்கு செயலகத்தில் பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் சிறப்பாக நடை பெற்றன.



நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதே சத்தின் நஞ்சற்ற விவசாய உற் பத்திகளை உருவாக்கும் சிறந்த விவசாயிகள் மதிப்பளிக்கப்பட் டனர். அத்துடன் கலை நிகழ்வு களும் நடைபெற்றன.

நிகழ்வில் சிறப்புரையாற்றிய மாந்தைமேற்கு பிரதேச செயலாளர் எஸ். கேதீஸ்வரன் கருத்துத் தெரிவிக்கும் போது "சமூகத்துக்கு உணவளிக்கும் விவ சாயிகள் மதிப்பளித்துப் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். அந்த வகையில் நஞ் சற்ற உணவுப்பயிர்களை உற்பத்திசெய் யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் விவசாயிகள் மதிப்பளிக் கப்பட்டனர். விவசாயிகள் நமது எதிர்கால சந்ததியினரின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு நஞ்சற்ற பயிர்வகைகளை உற் பத்தி செய்ய முன்வர வேண்டும்" எனத் தெரிவித்தார்.

இந்தப் பொங்கல் விழாவில் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர், கலாசார உத்தியோ கத்தர் மற்றும் பதவி நிலை உத்தியோகத் தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-213)

## மக்கள் சந்திப்பு

மன்னார்,ஜன.22

நாடாளுமன்ற உறுப்பி னர் காதர் மஸ்தான் மன் னார் மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் அண் மையில் சென்று மக்கள் சந்திப்பை மேற்கொண் டார்.

மடு பிரதேச செயலர் பிரி வுக்கு உட்பட்ட சோதிந கர்,பெரியமுறிப்பு,மாதா கிராமம்,தேக்கம் போன்ற கிராமங்களில் மக்களை சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகள் தொடர் பில் கலந்துரையாடினார் என்று தெரிவிக்கப்பட் டது. (ஐ-213)





நானாட்டான் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினரால் புளியடி மருத்துவமனையில் டெங்கு ஒழிப்புச் சிரமதானப் பணிகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன. (க-213)

# அரசமைப்பே தெரியாத இனவாதியே வீரவன்ச

## மனோ காட்டம்



**கொழும்பு, ஜன. 22**

**"அரசமைப்பு பற்றிய அறிவற்ற ஒரு முட்டாள் இனவாதிதான் அமைச்சர் விமல் வீரவன்ச." இவ்வாறு காரசாரமாக விமர்சித்துள்ளார் முன்னாள் தேசிய ஒருமைப்பாடு, மொழி விவகார, சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.**

மன்னார் மாவட்ட செல்வாரியில் அமைந்துள்ள பனை அபிவிருத்தி சபை நிறுவனம் ஒன்றின் மும்மொழி பெயர்ப்பலகையில் தமிழ்மொழியைத் தரவிறக்கம் செய்துள்ள அமைச்சர் விமல் வீரவன்சவின் நடவடிக்கை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை பற்றி தனது முகநூல் மற்றும் கீச்சகங்களில் கருத்துக் கூறியுள்ள முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:

'வடக்கு மாகாணத்தின் மன்னார் செல்வாரியில் அமைந்துள்ள பனை உற்பத்தி நிலையத்தின் மும்மொழி பெயர்ப்பலகையைத் திறந்து வைத்த அமைச்சர் விமல் வீரவன்ச, அந்தப் பலகையில் முதலில் இருந்த தமிழ்மொழி எழுத்துக்களை மாற்றி முதலில் சிங்களத்தில் எழுதப்பட வேண்டும் என பனை அபிவிருத்தி சபை தலைவருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். அதன்படி இப்போது தமிழில் முதலில் எழுதப்பட்ட மும்மொழி பெயர்ப்பலகை மாற்றப்பட்டு, தற்போது சிங்களத்தில் முதலில் எழுதப்பட்ட மும்மொழி பலகை பொருத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் அமைச்சர் விமல் வீரவன்ச, தன்னை அரசமைப்பு பற்றிய அறிவற்ற ஒரு முட்டாள் இனவாதி என மீண்டும் ஒரு முறை அடையாளம் காட்டியுள்ளார். இலங்கையின் பல இன, மொழி, மத பன்மைத்துவத்தைச் சிதைத்து, இந்த நாட்டை மீண்டும் பின்னோக்கி 1950களின் 'சிங்களம் மட்டும்' என்ற இருண்ட யுகத்துக்கு அழைத்துச் செல்வதில் விமல் வீரவன்ச முன்னணி வகிக்கின்றார்.

இந்த நாட்டில் சமூக, பொருளாதார சீரமைப்பு மற்றும் ஒழுக்கம் என்று பல நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ காட்டிக்கொண்டாலும், இந்த நாட்டின் பன்மைத்தன்மை ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், இவை அனைத்தும் எந்தவித பயனையும் தராது.

இந்த அரசில் இடம்பெறும் தமிழ்மொழியை தாய்மொழியாகக் கொண்ட அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ஆறுமுகன் தொண்டமான் ஆகியோருக்கு இது தெரியவில்லையா? தமது அமைச்சரவை சகா விமல் வீரவன்சவின் இனவாத நடவடிக்கைகள் பற்றி விளங்கவில்லையா?

விமல் வீரவன்ச, தனது இந்த நடவடிக்கை மூலம் தமிழர்களை இலங்கை தேசிய வாழ்வில் இருந்து ஒதுக்கி வைக்கின்றார். தாம் சிங்கள மேலாண்மை ஆக்கிரமிப்பின் கீழேயே வாழ்கிறோம் என்ற எண்ணப்பாட்டை தமிழர்களுக்குத் தருகின்றார்.

நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது வீதத்துக்கு மேல் தமிழ் பேசும் இலங்கையர்கள் வாழும் மன்னாரில், அரச நிறுவன பெயர்ப் பலகையில் சிங்களத்தில்தான் முதலில் எழுதப்பட வேண்டும் என்பது ஆக்கிரமிப்பு, மேலாண்மை சிந்தனை என்பதை தவிர வேறு என்ன? மறுபுறம் விமல் வீரவன்ச என்ற இந்த அமைச்சருக்குச் சட்டம் தெரியவில்லை. அரசமைப்பின் 18ஆம், 19ஆம் விதிகளின்படி சிங்களமும், தமிழும் இந் நாட்டின் அரசகரும மற்றும் தேசிய மொழிகள் எனக் கூறப்பட்டுள்ளன.

எந்த இடத்திலும் சிங்களம், தமிழைவிட உயர்ந்தது எனக் கூறப்படவில்லை. அதே வேளை, 22ஆம் விதியின்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரச நிர்வாகப் பதிவேடுகள் தமிழிலும், ஏனைய மாகாணங்களில் சிங்களத்திலும் இருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

நாடு முழுக்க பெயர்ப் பலகைகளில் சிங்களத்தில்தான் முதலில் எழுதப்பட வேண்டும் என்ற சட்டம் எங்கே இருக்கின்றது? அப்படி ஒரு சட்டம் இல்லை.- என்று தெரிவித்துள்ளார். (ம-22)

# புகைப்பட கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜன.22

'யாழ்ப்பாண பழங்கால ஒளிப் படங்களின் திருவிழா 2020" என்னும் புகைப்படக் கண்காட்சி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தந்தை செல்வா அரங்கில் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை தொடர்ந்து மூன்று நாள்கள் இக்கண்காட்சி இடம்பெறும்.

1800 களின் இறுதியில் முதலாவது தலைமுறைக் கலைஞரான எஸ். கே. லோட்டன் கனகரட்ணம் பயன்படுத்திய ஒளிப்படகருவி உட்பட 50 இற்கு மேற்பட்ட பழைய ஒளிக்கருவிகளின் பாகங்கள், பழைய ஒளிப்பட கலையகத்தின் உட்கட்டமைப்பு மற்றும் பழைய புகைப்படங்கள் என்பன காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மூன்று. நாள்களும் கண்காட்சி முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது. கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் பழைய படப்பிடிப்பாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-20)

# 1000 ரூபா ஊதியம் இப்போது முடியாது

கொழும்பு, ஜன. 22

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாவை தினச் சம்பளமாக வழங்குவதற்கு தற்போது முடியாதுள்ளதாக தோட்ட நிறுவனங்கள் அரசுக்குத் தெரிவித்துள்ளன எனத் தெரியவருகின்றது.

பத்தரமுல்லையிலுள்ள பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் 23 பெருந்தோட்ட நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் உடனடியாக ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்க முடியாத நிலை நிலவுவதாக பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதானிகள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர். (ம)

# நீதி நூல் மனனப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.22

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் மாணவர்களிடையே நீதி நூல் மனனப்போட்டியை நடத்தவுள்ளது. மாணவர்களுக்கிடையில் சைவ சமய அறிவை விருத்தி செய்யும் பொரு ட்டு வருடாந்தம் தரம் 1,2,3 மாணவர்களுக்கு இப்போட்டி நடத்தப்பட்டுவருகிறது. தரம் 1 இற்கு ஆத்திசூடி,கொன்றை வேந்தனில் முதல் 10 வரிகளும், தரம் 2இற்கு ஆத்திசூடி கொன்றை வேந்தனில் முதல் 15வரிகளுடன் உலக நீதியில் முதல் பாட்டும், தரம் 3 இற்கு ஆத்திசூடி,கொன்றை வேந்தனில் முதல் 20 வரிகளுடன் உலக நீதியில் முதல் 2 பாட்டுக்களும் மனனம் செய்து ஒப்புவித்தல் வேண்டும்.

இப்போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி யாழ்ப்பாணம் இந்துக் கலூரியில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 25 ஆம் திகதியாகும். போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் 40 புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி மகா சிவராத்தி ரியன்று வழங்கப்படும். போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82 நாவலர் வீதி வண்ணார் பண்ணையாழ்ப்பாணம் என்ற முகவரியில் பிற்பகல் 3 மணிமுதல் மாலை 6 மணிவரை தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைபெறலாம் என்று சைவ சமய அபிவிருத்திக்கழகத்தின் பரீட்சை செயலர் சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (ஐ)

# இலங்கைக்கான தூதுவர்கள் நியமனம்









கோத்தாபய அரசு பதவியேற்றதைத் தொடர்ந்து இலங்கைக்கான தூதுவர்கள் பலர் அந்தந்த நாடுகளால் நியமிக்கப்பட்டுள்ளனர். இலங்கைக்கான ஸ்லோவேனியா குடியரசின் முழு அதிகாரமுடைய மற்றும் சிறப்புத் தூதுவராக கலாநிதி மார்ஜன் சென்சென் நியமிக்கப்பட் டுள்ளார்.

இலங்கைக்கான கட்டாரின் முழு அதிகாரமுடைய மற்றும் சிறப்புத் தூதுவராக ஜஸ்ஸிம் பின் ஜாபெர் ஜே.பி. அல்சொரோர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கான துருக்கி இராச்சியத்தின் தூதுவராக திருமதி ரகிபே டெமெட் செகேர்சியொக்லு நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கான லக்சம்பர்க் கிராண்ட் டச்சியின் முழு அதிகாரமுடைய மற்றும் சிறப்புத் தூதுவராக ஜீன் க்லோட் குகேனர் இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் லக்சம்பர்க் கிராண்ட் டச்சியின் அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கான பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் உயர்ஸ்தானிகராக மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) முஹம்மத் சாத் ஹத்தாக் இலங்கை அரசின் ஒப்புதலுடன் பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் அரசால் நியமிக்கப்பட்டுள்ளார். (ம)



# முப்படையினர் பாதுகாப்பிலும் கொள்ளையர்கள் அட்டகாசம்

## பிரிகேடியரிடம் பிரஜைகள் குழுவினர் முறைப்பாடு

மன்னார்,ஜன.22

மன்னாரில் அண்மைக் காலமாக முப்படையினர் பாதுகாப்புக் கடமைகளில் இருக்கும்போதே, வீடுகளில் உட்புகுந்து கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. கொள்ளையிடும் இடங்களில் வீட்டார் தாக்கப்படும் சம்பவங்களும் நடைபெறுகின்றன. அத்துடன் மன்னாரிலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகள் சோதனை என்ற போர்வையில் நீண்ட தூரம் நடந்து செல்லும் நிலைமைகளும் காணப்படுகின்றன என்று மன்னார் பிரஜைகள்குழுவினர் தள்ளாடி பிரிகேடியரைச் சந்தித்து எடுத்துக் கூறினர்.



மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவினர், 54 ஆவது பிரிவு மன்னார் தள்ளாடி இராணுவ முகாம் பிரிகேடியர் சுபாஜானா வெலிக்கலை தள்ளாடி முகாமில் நேற்று முன்தினம் சந்தித்தனர். அங்கு அவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்தனர்.

மன்னாரிலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வோர் செட்டிகுளம் ஆண்டியா புளியங்குளத்தில் இராணுவத்தின் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். பயணிகள் வாகனங்களிலிருந்து இறக்கப்பட்டு நீண்ட தூரம் கால்நடையாக நடத்திவிடப் படுகின்றனர். கடந்த காலங்களை விடத் தற்போது அதிகமான சோதனைச் சாவடிகளை இராணுவத்தினர் ஏற்படுத்தியுள்ளனர். இது மக்கள் மத்தியில் அச்சநிலையை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் தீவு கடல் மட்டத்துக்கு கீழ் இருப்பதால் இங்கு மணல் அகழ்வு மிக மோசமாக நடைபெற்று வருகிறது. எனவே மணல் அகழ்வதை நிறுத்துவ தற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

இராணுவப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்ட பின்னர் மன்னார் மாவட்டத்தில் பரவலாகக் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. அதுவும் இரவு வேளைகளில் வீடுகளுக்குள் உட்புகும் கொள்ளையர்கள் கொள்ளையடிப்பதுடன் நின்று விடாது வீட்டிலுள்ளவர்களைத் தாக்கும் சம்பவங்களும் இடம் பெறுகின்றன.

மன்னார் இரண்டாம் கட்டையில் இயங்கி வந்த ஆடைத் தொழிற்சாலை தற்போது மூடப்பட்டுள்ளது. அந்தத் தொழிற்சாலையை மீண்டும் இயக்குவதற்கோ அல்லது பொருத்தமான தொழிற்சாலையாக இயக்குவதற்கான நடவடிக்கையையோ மேற்கொள்ள வேண்டும். மன்னார் பொது மருத்துவமனையின் வளாகமும், அதன் சுற்றாடலும் புற்செடிகளால் காடுகள் போல் பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன. அங்கு டெங்கு அபாயமும் இருப்பதால் முடிந்தளவு இராணுவத்தினரையும், ஊழியர்கள், பொது மக்களை இணைத்து சிரமதானங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் இந்த மருத்துவமனை மாகாண சபைக்கு உட்பட்டு இருப்பதால் அபிவிருத்தி காண்பதில் பின்னடைவையே நோக்கிக் காணப்படுகின்றது. தொற்றா நோய்களுக்கான மருத்துவ நிபுணர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஆளணி பற்றாக்குறையும் நீக்கப்பட வேண்டும்.

மன்னார் தீவுப் பகுதியில் பனை மரங்கள் மற்றும் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றமையால் தீவு அபாயகரமான நிலைக்குத் தள்ளப்படுகிறது. எனவே மாற்றுச் செயல்பாடாக பனை விதைகள் நடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை குழுவினர் முன்வைத்த னர். (க-60)

# நாட்டிய அரங்கேற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.22

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நடனத்துறை விரிவுரையாளரும், கொக்குவில் புஸ்பாலயா நடன சபாவின் இயக்குநருமாகியரஜிதாசின்னத்துரையின் மாணவிகளான , வைஷ்ணவி சிவபாஸ்கரன், வைதேகி சிவபாஸ்கரன் ஆகியோரது பரதநாட்டிய அரங்கேற்றம் யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் முன்னாள் தலைவர் கலாநிதி கிருஷாந்தி ரவீந்திரா, ஓய்வுபெற்ற அதிபர் வே. ஞானகாந்தன், அரங்கேற்றம் கண்ட செல்விகளின் முதற் குரு ஓய்வு பெற்ற நடனத்துறை ஆசிரியர் வசந்தி குஞ்சிதபாதம், கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், கலாபூஷணம் பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் அணிசேர் கலைஞர்களாக நட்டுவாங்கம் விரிவுரையாளர் ரஜிதா சின்னத்துரை, பாட்டு - யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இசைத் துறைவிரிவுரையாளர் அ.அமிர்தசிந்துஜன், வயலின் விரிவுரையாளர் கா. குகபரன், மிருதங்கம் கலாவித்தகர் க. நந்தகுமார், ஓகன் ஆசிரியர் சி. ரஜீவன் ஆகியோர் பங்குபற்றினர். (ஐ)







# நெல்லைக் கொள்வனவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## சாள்ஸ் எம்.பி. சமலுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 22

தற்போது அறுவடை செய்யப்படும் நெல்லினைச் சந்தைப்படுத்தல் சபையினர் மூலம் அரசு கொள்வனவுசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுகோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் விவசாய அமைச்சர் சமல் ராஜபக்ஷவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

"2019/2020 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற் செய்கை அறுவடைகள் இடம்பெறுகின்றன. அதனைக் கொள்வனவுசெய்ய நெல் சந்தைப்படுத்தல் சபை இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இதனால் அறுவடைசெய்யும் நெல்லை சந்தைப்படுத்துவதில் தாம் சிரமப்படுகின்றோம் என்று நெற் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, போரில் அதிகம் பாதித்த வன்னித் தேர்தல் மாவட்ட விவசாயிகளின் நிலைமையைக் கருத்திற்கொண்டு நெல் கொள்வனவுக்கு உடனடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் . இதன் மூலமாகவே விவசாயிகளின் வாழ்வாதாரம் காப்பாறப்படும்" என்றும் கடிதத்தில் குறிப்பிட்டுள் ளார்.




(த-105)

# சடலம் மீட்பு

நுவரெலியா, ஜன. 22

நானுஓயாபொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட தலவாக்கலை நுவரெலியா சுற்றுவட்டபிரதானவீதியில் நானுஓயா சமர்செட் தோட்டம்ஈஸ்டல்பிரிவில் பிரதானவீதிக்குஅருகில்ஒருவர்கூரியஆயுதத்தால் தாக்கிக்கொலைசெய்யபட்டுள்ளார்என நானுஓயா பொலிஸார்தெரிவித்துள்ளனர்.



இந்தச்சம்பவம்நேற்றுமுன்தினம் இரவு9.30மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபருக்கும் அந்தப் பகுதியைச் சேர்ந்த திருமணமானபெண்ஒருவருக்கும்இடையில்தகாத உறவு இருந்ததாகவும், அந்தப்பெண்ணின் கணவரே இவரைக்கொலைசெய்திருக்கலாம்என்றுசந்தேகிப்பதாகவும்பொலிஸார் குறிப்பிட்டனர். (ஒ.5)



## கூட்டுறவுச் சங்கங்களுக்கு வட்டி இழப்பு கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஜன.22

யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தால், பிரமுக வங்கியில் நிலையான வைப்பில் இடப்பட்ட பணத்துக்குரிய வட்டி இழப்புக்கான கொடுப்பனவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டது.

மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கி சமாசத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி சியாமளா சண்முகலிங்கம் கலந்து கொண்டு சங்கங்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுக்கான காசோலைகளை வழங்கினார்.

இதில் 5 கூட்டுறவுச் சங்கங்களுக்கு முழுமையான கொடுப்பனவும், மற்றைய 5 சங்கங்களுக்குப் பகுதியான கொடுப்பனவும் வழங்கப்பட்டன. (சு-17)

## தரம் 1 வகுப்பில் 40 மாணவர்கள்!

கொழும்பு, ஜன. 22

அரச பாடசாலைகளிலுள்ள தரம் ஒன்று வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை 40ஆக அதிகரிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது, தரம் ஒன்று வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 35 ஆக இருக்க வேண்டும் என்பது நீதிமன்ற உத்தரவாகக் காணப்படுகின்றது. இத்தீர்ப்பை மீளாய்வு செய்து, மாணவர்களின் எண்ணிக்கையை 40ஆக உயர்த்துவதன் பொருட்டு, உச்சநீதிமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டுமென கடந்த ஜனவரி 2ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கல்வி அமைச்சர் டளஸ் அளகப்பெரும முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதியளித்திருந்தது.

ஆரம்ப வகுப்புகளுக்கு ஆசிரிய உதவியாளர்களை நியமிக்கின்ற, 'சௌபாக்கியத்தின் நோக்கு' தேசிய கொள்கைக்கு அமைய, ஆரம்ப வகுப்புகளுக்குப் பொறுப்பான ஆசிரியருக்கு இதுவரை இருந்த அழுத்தம் மற்றும் முகாமைத்துவச் சிக்கல்கள் முடிவுக்கு வரும் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது. ஆசிரியர் உதவியாளர்களை நியமிப்பதற்கான கொள்கை முடிவுக்கான பின்னணியின் அடிப்படையிலேயே, மாணவர்களின் எண்ணிக்கையை 35 முதல் 40 ஆக உயர்த்துவதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

## பொங்கல் விழா

கொடிகாமம்,ஜன.22

முத்தமிழ் சிறுவர் கழகத்தின் பொங்கல் விழா கைதடி தெற்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது.

தெ.சுஜாங்கயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக உளவளத்துறை அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.பிரியா, சிறப்பு விருந்தினர்களாக கைதடி தெற்கு கிராம அலுவலர் வி.நியூரிஷா, கைதடி தெற்கு பொதுச் சுகாதார பரிசோதகர் க.கிருஷ்ணரட்சகன், முன்பள்ளி ஆசிரியர் திருமதி ஜே.விஜயகுமார் கௌரவ விருந்தினர்களாக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.அனுராகரன், சமுர்த்தி உத்தியோகத்தர் சி.துசீபன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.ஜானகி, கைதடி மின்னொளி மாதர் சங்கத் தலைவி சி.குலமங்களம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஜ-159)





### 2 ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர்
**பசுபதி பாலரஞ்சன்**

திதி: திரியோதசி (22.01.2020)

தோற்றம் 14.12.1965
மறைவு 15.01.2018

ரஞ்சனமான ரத்தினமே! ரத்த பந்தம் விட்டு எங்கு சென்றீரோ
ரம்மியமான பேச்சால் பிரமிக்க வைப்பவரே - உம்
ரம்மியமான முகம் காண ராப்பகலாய் தவிக்கின்றோம்
இரண்டாண்டானதையா நேரில் உமைக்கண்டு

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சிவராசரத்தினம் மோகன்

(வைத்திய கலாநிதி, லண்டன்)



தாயின் மடியில் 11.08.1964
கந்தன் காலடியில் 19.01.2020

இளவாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசரத்தினம் மோகன் 19.01.2020 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவராசரத்தினம் - புஸ்பராணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான Dr. பத்மநாதன் - சண்முகவடிவு தம்பதிகளின் அன்பு மருமகனும், Dr.சௌமினியின் பாசமிகு கணவரும், கோபிகாவின் பிரியமான தந்தையும், சுரேசின் அன்புச் சகோதரரும், ரிஷி, விஷால் ஆகியோரின் பெரிய தகப்பனும், ரகுவதனா, பாமினி, நளாயினி, பாலஸ்கந்தன் ஆகியோரின் மைத்துனரும், திருஞானரத்தினம், காலஞ்சென்ற தேவதாசன் மற்றும் பிரேமதாசன், சத்தியதரன், காலஞ்சென்ற உமாராணி ஆகியோரின் பெறாமகனும், விசுவநாத முதலியார், முருகதாசன், சிறீதரன் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- மு.பிரேமதாசன் (சித்தப்பா)
இளவாலை வடக்கு, இளவாலை.
(CS30720)(13,17)
021 222 5918, 077 222 8996

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி பரமேஸ்வரி தர்மராசா**
(ஆச்சிப்பிள்ளை)
(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியர்)

மலர்வு 16.04.1936
உதிர்வு 02.02.2019

திதி: தேய்பிறை திரயோதசி (22.01.2020)

ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம்
அம்மா உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களில்
என்றுமே நிலைத்திருக்கும்.

94, பழம் வீதி,
கந்தர்மடம்.
(CS 30741)(13,17)
குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

**திருமதி பஸ்மராணி இராசரெத்தினம்**



தோற்றம் 09.04.1964
மறைவு 19.01.2020

யாழ். வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஸ்மராணி இராசரெத்தினம் அவர்கள் 19-01-2020 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-01-2020) புதன்கிழமை 9.00 மணியிலிருந்து 11.00 மணிவரை 10, மிஷன் பாடசாலை லேன், போஸ்ட் ஒபிஸ் லேன், ஆறுகால்மடத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10, மிஷன் பாடசாலை லேன்,
போஸ்ட் ஒபிஸ் லேன், ஆறுகால் மடம்.
தகவல்: குடும்பத்தினர்
சயந்தன் - 075 648 3378



பிறப்பு 07.07.1954
இறப்பு 20.01.2020

### செல்வி நாகலிங்கம் பத்மாவதி

வட்டுதெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி நாகலிங்கம் பத்மாவதி 20.01.2020 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சிவசோதி தம்பதிகளின் அன்பு மகளும் சரோஜினி, நகுலேஸ்வரி, கோணேஸ்வரன் (லண்டன்), விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கணேசரத்தினம் மற்றும் நந்தினி (லண்டன்), பிரேமச்சந்திரன் ஆகியோரின் மைத்துனியும் கீர்த்துஷன், ஹரிஸ் ஆகியோரின் மாமியாரும் நிரோஷன், மதுஷா, மதுரந்தி ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
நா.கோணேஸ்வரன் (சகோதரன்)
வட்டுத்தெற்கு,
வட்டுக்கோட்டை.
(CS 30742)(14,17)



# நெல் கொள்வனவுக்கு விலை நிர்ணயம்

மன்னார்,ஜன.22
நெல் கொள்வனவுக்கான நிர்ணய விலை விரைவில் அறிவிக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பூமலர்ந்தான் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த வருட இறுதியில் இடம்பெற்ற வெள்ளப் பாதிப்புகள் தொடர்பான தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள நெற்செய்கைகளுக்கான நட்டஈடு வழங்குவதற்கான பணிகள் விரைவில் முன்னெடுக்கப் படும்.

தற்போது நெல் கொள்முதலுக்கு விலை நிர்ணயம் செய்வதாக அரச தரப்பால் கூறப்பட்டுள்ளது. அதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. மக்களின் முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தப்பட்ட அமைச்சருடன் இது தொடர்பில் பேசப்படும். அறுவடை செய்யப்பட்டுள்ள நெல்லை விவசாயிகள் நட்டம் இல்லாத வகையில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளும், நிர்ணயிக்கப்பட்ட விலையை உறுதி செய்து தருவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். - என்றார்.
(க-56)

# மாணவர்களுக்கிடையில் செயல்முறைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜன.22
வண்ணை சாந்தையர்மடம் சிறி கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம், பாடசாலை மாணவர்களுக்கிடையில் வருடாந்தம் நடத்திவரும் செயல்முறைப் போட்டிகள் இவ்வாண்டும் நடைபெறவுள்ளன. மாணவர்களிடையே சைவ சமய கலை,கலாசார விழுமியங்களை விருத்தி செய்யும் பொருட்டு இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கோலம் போடுதல், மாலை கட்டுதல்,தோரணம் பின்னுதல் ஆகிய செயற்முறைப் போட்டிகள் கீழ்ப்பிரிவு,மத்திய பிரிவு என்னும் இரு பிரிவுகளில் நடைபெறவுள்ளன. கீழ்ப் பிரிவு தரம் 4 தொடக்கம் தரம் 7வரையும்,மத்திய பிரிவு தரம் 8 தொடக்கம் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கென வரையறுக்கப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி யாழ்ப்பாணம் நகரப் பாடசாலை ஒன்றில் நடைபெறவுள்ளது. விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 25ஆம்திகதியாகும். போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் 40 புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82நாவலர் வீதி வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 வரை தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம் என்று சைவ சமய அபிவிருத்திக் கழக பரீட்சை செயலர் அறிவித்துள்ளார். (ஐ)

# மோதலில் மூவர் காயம்

சாவகச்சேரி, ஜன.22
மோதல் சம்பவங்களில் காயமடைந்த மூவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
மோதல் சம்பவங்கள் நேற்று நடந்துள்ளன.
நாவற்குழி ஐயனார் கோவிலடிப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் காயமடைந்த பெண் உட்பட இருவரும், பாலாவித் தெற்குப் பகுதியில் தாக்கப்பட்ட இளைஞரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-9)

# விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் அமைந்த குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றன.

இதன்படி வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் இன்றும் நாளையும் ஏற்றப்படவுள்ளன.

இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை இராஜசிங்கம் வீதி மாதா சிலையடிப் பகுதியிலும், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை சென்.பற்றிக்ஸ் வீதி சேமக்காலை அருகிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை சென்.பற்றிக்ஸ் வீதி கதிற்றல் வீதி சந்தி அருகிலும் நடைபெறவுள்ளன.

நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை இராஜேந்திரா வீதியிலும், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை டேவிற் வீதி கடற்கரை வீதி சந்திக்கு அருகிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை டேவிற் வீதி கதிற்றல் வீதிசந்திக்குஅருகிலும்நடைபெறவுள்ளன.

எனவே ஒவ்வொருவரும் தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறும், உரிமக்கட்டணமாக 30 ரூபா அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)


## நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப அலுவலகம்
## ஆதன பெயர் மாற்றம்

ஆதன இல:68/4A (புதிய இல.23) ஸ்ரேசன் வீதி வட்டாரம் 05. இவ்வாதனம் நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப அலுவலக ஆதன பதிவேட்டில் E.சோமசுந்தரம் சரஸ்வதி என்ற பெயரில் காணப்படுகிறது. இவ்வாதனத்தை தசீகரன் பெண் திவ்யா என்பவர் தனது பெயருக்கு ஆதன பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

தசீகரன் பெண் திவ்யா என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிகளின்படி. இவ்வாதனம் இளையதம்பி சோமசுந்தரமும். சோமசுந்தரம் சந்திரபாலனும். கந்தையா திருவாதரனும் பெண் தங்கராணியும். பெரேரா யோசப்பின் பெரேரா தாசனும் பெண் பாமாவும். சோமசுந்தரம் மகள் இரத்தினதேவியும் கணையசிங்கம் கைம்பெண் யோகமலரும் சோமசுந்தரம் மகள் செல்வமலரும் ஆகியோர் தங்களின் 1ம் பெயரின் மகளும். 2ம். 4ம். 6ம். 7ம். 8ம். 9ம் பெயர்களின் சகோதரியுமான கொக்குவில்-கிழக்கு. இராமுப்பிள்ளை சண்முகநாதன் பெண் செல்வராணிக்கு 5274ம் இலக்க 07.05.2000ம் திகதிய. பிரசித்த நொத்தாரிசு கனகரத்தினம் கேசவன் முன்பாக நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் நன்கொடை வழங்கியுள்ளனர். இவ் 5274ம் இலக்க நன்கொடை உறுதியில். தாய் உறுதியின் இலக்கம் திகதி அத்தாட்சிப்படுத்திய நொத்தாரிசு என்பன குறிப்பிடப்படாமல் இவ்வாதனம் 1ம் பெயரிலும். 1ம் பெயரின் மனைவியும் 2ம்.4ம்.6ம். 7ம்.8ம்.9ம் பெயர்களினதும். நன்கொடை ஏற்பவரினதும் மாதாவாக இருந்து காலஞ்சென்ற சோமசுந்தரம் பெண் சரஸ்வதி பெயரிலும் நிறைவேறிய அறுதி உறுதிப்படி தங்களின் 1ம் பெயரின் கொள்விலையும். 2ம். 4ம். 6ம். 7ம். 8ம். 9ம் பெயர்களினதும் நன்கொடை ஏற்பவரின் மாதாவழி முதுசமும் நெடுங்கால ஆட்சியுமானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆதனத்தின் விபரம் நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் இறை "சட்டைகலட்டியும் கரியப் புலமும்-விஸ்தீரணம் உறுதிப்படி நில.பர.02 குளி 1)

தற்போது மேற்படி 5294ம் இலக்க உறுதியைத் தாயுறுதியாகக் கொண்டு மேற்குறித்த இராமுப்பிள்ளை சண்முகநாதனும் பெண் செல்வராணியும் ஆகியோரால் 171ம் இலக்க 03.02.2017 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிசு ஸ்ரீதரன் அம்பிகா முன்பாக நிறைவேறிய சீதன உறுதி மூலம். பெறாமகள் - தங்கவடிவேல் தசீகரன் பெண் திவ்யா என்பவருக்கு சீதனம் வழங்கியுள்ளனர்.

எனவே. மேற்படி விபரங்களை வெளிப்படுத்தி இவ் உறுதிகள் காணப்படுவதால். இவ்வாதனம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ. வெளிநாட்டில் வசிப்பவர்களாக யிருந்தால் இங்குள்ள உறவினரூடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும். யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர் தசீகரன் பெண் திவ்யா என்பவரின் பெயருக்கு ஆதன பெயர் மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும். இந்த ஆதன பெயர் மாற்றம் செய்வதால், வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்**
**நல்லூர் பிரதேசசபை.**






*Jaffna Programme*

BLOWHARDS: TEA/COFFEE
written by
*Arun*
*Welandawe-Prematilleke*
2019 Gratiaen Prize winner.

"Narcissism, corruption, exploitation and ignorance all take starring turns" in BLOWHARDS, a double feature of two 20-minute plays that satirise and lampoon Colombo attitudes towards social issues.

FOLLOWED BY A PANEL DISCUSSION WITH
Arun Welandawe-Prematilleke, Vasuki Rajasingham, Ayathurai Santhan & Shyam Selvadurai.

**16th February 2020 - 4pm**
**Kailaspathy Auditorium**
**Jaffna University**
**Entrance Free**

Apply now to join
*Shyam Selvadurai*
for an English Creative Writing
*Workshop on*
*Point of View*

Send in your bio and a 2-paragraph (250-word) personal statement on why you want to be a part of the workshop by 27th January 2020 to gratiaentrust@gmail.com.

20 participants will be selected for the workshop hosted by the Gratiaen Trust.

The selection of participants by the Gratiaen Trust will be final.

**16th February 2020**
**9.30am - 1pm**
**Arts Faculty**
**Jaffna University**

The Gratiaen Trust in collaboration with the Department of Linguistics and English, University of Jaffna.

IN ASSOCIATION WITH




# நிரந்தர நியமனம் வழங்கக் கோரி தொண்டர் ஆசிரியர் போராட்டம்

**யாழ்ப்பாணம்,ஜன.22**

**வடக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் வழங்கக் கோரி, ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

மாகாணத்தில் நீண்ட காலமாகக் கடமையாற்றும் தமக்கு நியமனம் வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"நியமனத்தை வழங்கக் கோரி பல்வேறு தரப்பினர்களையும் சந்தித்துள்ளோம். வடக்கு மாகாண ஆளுநர்களாகப் புதிதுபுதிதாக வருகின்ற பலரையும் சந்தித்துள்ளோம். தற்போது புதிய ஆளுநர் கடமையேற்றுள்ளார். அவராவது எங்களுக்கான நியமனங்களை உரிய முறையில் விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று" போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். போராட்டத்தில் தொண்டர் ஆசிரியர்கள் ஈடுபட்ட போது, அலுவலகத்தில் ஆளுநர் இல்லாத காரணத்தால், ஆளுநரின் ஊடகச் செயலாளர் போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர் ஆசிரியர்களைச் சந்தித்தார். எதிர்வரும் புதன்கிழமை ஆளுநருடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படும் என்று அவர் வழங்கிய வாக்குறுதியையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.(க-20)

# ராஜிதவுக்கு எதிரான சீராய்வு மனு மீது மார்ச்சில் விசாரணை

கொழும்பு. ஜன. 22

நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்குப் பிணை வழங்கியமைக்கு எதிராக சட்டமா அதிபர் முன்வைத்த சீராய்வு மனுவை மார்ச் மாதம் 5ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

குறித்த சீராய்வு மனு கடந்த 17ஆம் திகதி கொழும்பு மேல்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது. இதன்போது நேற்று அது தொடர்பான உத்தரவு பிறப்பிக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

சர்ச்சைக்குரிய வெள்ளை வான் ஊடகவியலாளர் சந்திப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ராஜித அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார். அதன் பின்னர் அவரை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்திருந்தது. அத்துடன், ராஜித சேனாரத்னவுக்கு வெளிநாடு செல்வதற்கு நீதிவான் பயணத் தடை விதித்திருந்ததுடன், அவரது கடவுச் சீட்டை நீதிமன்றின் பொறுப்பில் வைத்திருக்கவும் உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்கு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்கியமைக்கு எதிராக சட்டமா அதிபர் சீராய்வு மனுத் தாக்கல் செய்தார். கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பிணை வழங்கல் உத்தரவு சட்டத்துக்குப் புறம்பானது என கூறி இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கால்கோள் விழாக்கள்

## கரவெட்டிக் கிழக்கு யா/ கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்



கரவெட்டிக் கிழக்கு யா/ கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தின் கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை பாடசாலையில் சிறப்பாக நடைபெற்றது.(ஐ)

## போக்கட்டி அ.த.க.பாடசாலை



போக்கட்டி அ.த.க.பாடசாலையின் கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பி.தோமஸ் எடிசன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி வேல்ட்விஷன் திட்ட இணைப்பாளர் மொ. வசந்தநாயகம், கௌரவ விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் சி.சிவதாசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தரம் ஒன்று மாணவர்களை, தரம் இரண்டு மாணவர்கள் மாலை அணிவித்து வரவேற்றனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (ஐ-159)

## கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய கலையரங்கில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் சி.சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் வே.கமலேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வேலணைப் பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலுவலக முன்பள்ளி ஆசிரியர் திருமதி ஜீவா ஜெயரூபி உட்பட பலர் கலந்து கொண்டனர். தரம் இரண்டு மாணவர்கள் தரம் ஒன்றுக்குப் புதிதாக இணைந்த மாணவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்றனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (ஐ-159)



உதயன்
@UthayanPrint
புதன் பொய்கை
ஜனவரி 22 2020

# நெஞ்சமதை வருடிச்சென்ற 'மலைத் தென்றல்'


■ யோ.கஜன்

'கனியிடை ஏறிய சுளையும்முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்...'














எனும் உணர்ச்சிக் கவிஞன் பாரதிதாசன் தடம்பற்றி ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்கள் பெருமையுடன் வழங்கும் மலைத்தென்றல் ஆறாவது தடவையாக 'எம் மொழி வாழினும் எம் தமிழ் வளரும்' எனும் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இம்முறையும் அரங்கேறியது.

இலங்கையின் எழில்மிகு ஊவா மாகாணத்தின் குறிஞ்சியின் தலைநகரம் பதுளை நகரிலே அமைந்திருக்கின்ற பதுளை சைமன் பீரிஸ் ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் முத்தமிழ் நிறைந்த கலை கலாசாரப் பெருவிழாவாய் நிறைவேறியது மலைத் தென்றல்.

மலைத்தென்றல் நிகழ்வு வெறுமனே கலை கலாசார நிகழ்வுகளோடு நிறுத்திவிடாது நூல் வெளியீடு, கருப்பொருளை அடிநாதமாகக் கொண்ட பாடல் வெளியீடு மற்றும் அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கான கவிதை கட்டுரைப் போட்டி நிகழ்ச்சியினையும், புகைப்படக் கலைஞர்களுக்கான கண்வழியே எனும் போட்டி நிகழ்ச்சியினையும் உள்ளடக்கி அவர்களுக்கான பரிசில்கள் மற்றும் கௌரவிப்புக்களையும் வழங்கியிருந்தமை முக்கியமான அம்சமாகும்.

இம்முறை மலைத்தென்றல் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊவா வெல்லஸ்ஸபல்கலைக்கழகதுணைவேந்தர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர கலந்துகொண்டார்.

கௌரவ விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக தகைசார் ஓய்வு நிலைத் தமிழ் பேராசிரியர் தேசநேத்திரா கலாகீர்த்தி பேராசிரியர் சி.தில்லைநாதன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக பதுளை நீதிமன்ற பதில் நீதிவானும் சட்டத்தரணியும் ஆகிய கந்தசாமி ரமேஷ்குமார், கிழக்கு பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் கலாநிதி ரி.பிரதீபன், பதுளை மாநகரசபை பிரதி மாநகர ஆணையாளர் ரி.கஜேந்திரகுமார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



# பழமைகளை பறைசாற்றும் சிங்கை ஆரம்

■ கே.எஸ்.சிவஞானராஜா

நல்லூர் என்ற நாமம் உலகத்தவர் வாழ்வினில் ஒரு மந்திரமாக இனிக்கிறது. முன்னொரு காலத்தில் நல்லூர் ஓர் இராசதானியாகவும் ஒரு தலைநகரமாகவும் விளங்கியமை வரலாறுகளில் பதிவாகியுள்ளது. அதைவிட அற்புத ஞானியரும் சித்தர்களும் முனிவர்களும் அதிசயமாக வாழ்ந்து பேறடைந்த மண்ணும் கூட!. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றி வளர்ப்பதற்கு அடிநாதமாக விளங்கிய புண்ணிய பூமியும் நல்லூராகும். அத்தகு மேன்மை கொண்டு மேதினியை வசீகரிக்கும் ஒரு வல்ல நிர்வாக ஆளுகை புரிகிறது நல்லூர் பிரதேச செயலகமாகும். நல்லூர் பிரதேச செயலகமும் நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து சிங்கை ஆரம் என்ற பிரதேச மலரை வெளியிட்டு கலை இலக்கியம், சமயம், வரலாறு, ஆய்வு, பாரம்பரியம். பண்பாடு தொடர்பான பல செய்திகளை மக்களுக்காக்கி மகிமை தருகின்றன.

வாழும் கலையே ஆளும் நமையே என்ற மகுட வாக்கியம் நனிசொட்டுமாறு கலைநயம் பிரவாகிக்க சிங்கை ஆரம் பிரதேச மலர் 3 அண்மையில் வெளியிடப்பட்டது. ஆம்! அது ஒரு காத்திரமான, கருப்பொருள்மிக்க, காலம் காலமாக வைத்துப் படித்துய்யும்படியான ஒரு நூலாகும். வரலாறு, சமயம், பண்பாடு, கலை, கவிதை, சிறுகதை மற்றும் வழமை யான அம்சங்களுடன் இந்த மலர் வெளிவந்துள்ளது.

### முகப்படை

பிருந்தாபனின் கைவண்ணத்தில் இந்த மலர் நறும ணம் வீசுகிறது. கிட்டத்தட்ட பதினைந்து கருவூலங்கள் கருத்தரிப்பதாய் முகப்பட்டை மோகன வடிவு கொள்கி றது. நல்லூர் பிரதேச கீதமும், கலாசாரப் பேரவைக் கீதமும் இனிக்கிறது. கவிஞர் ஜெயசீலனும், அமரர் தேவமநுரமும் தமது முத்திரைகளை மேற்படி கீதங் கள் வாயிலாகப் பதிக்கிறார்கள் ஆசிகளும், வாழ்த் துக்களும் மலருக்குப் புகழினை அள்ளிக்கொட்டுகின் றன.

### வரலாறு

நல்லூர் இராசதானியின் தொன்மம் என்ற ஆய்வுக் கட்டுரை தக்க சான்றுகளுடன் வரையப்பட்டு, எம்மை யும் ஒரு பங்காளியாக்கியுள்ளது. அனுராதபுரம், பொலநறுவை ஆகிய புராதன நகரங்கள் பேணப்பட் டுப் போற்றப்படுவது போல, நல்லூர் புராதன இராச தானியாக விளங்கிய போதும் இற்றைவரை மிகவும் கவனமாக அது பேணப்படவும் இல்லை. தமிழரின் தாற்பரியமாக அது போற்றப்படவும் இல்லை. பௌத் தமயமாக்கலுக்கு அரசு முன்னுரிமை கொடுக்கும் பாங்கினால், நல்லூரின் தொன்மங்கள் விரவியும் விளைந்தும் கிடைக்கும் இடங்களெல்லாம் நம்ம வர்கள் குடியிருப்புக்களையும் தொழிற்சாலைகளை யும் அமைப்பதற்கு வாய்ப்பாகவும், வரலாற்றுத் தேவைகளுக்குத் தோல்வியாகவும் அமைந்து விட்டன.

மந்திரிமனை, சங்கிலியன் தோப்பு, ஜமுனா ஏரி, கிட் டுப்பூங்கா, கல்வித்திணைக்களம் அமைந்த இடங்க ளும், சுற்றுப்புறங்களும் தமிழரின் தொன்மங்கள் சான்றாகக் கிடைக்கப்படும் புராதன இடங்களாகும். இவற்றை அரசியல்வாதிகளும் ஆன்மிகவாதிகளும் மக்களும் அரசும் மனங்கொள்ளாதிருப்பது கொழும் புக்கு நாம் செய்யும் உபகாரமாகவே அமையப் போகி றது. எல்லோருமே காணிவாங்கவும், வீடு கட்டவும், தம்மை வளர்க்கவும், பதவிகளைத் தக்க வைக்கவும், இலவசங்களை அனுபவிக்கவுமே படைக்கப்பட்டிருக் கிறோமா என்ற கேள்விக்கு விடையாக்கப்பட்டிருக்கி றோமே தவிர உருப்படியாக என்னத்தைச் சாதித்திருக் கிறோம். மேடைகளையும், தேர்தல்களையும், நவ நாகரீகங்களையும் நோக்கியே பயணிக்கின்றோம்.


### படைப்புகள்

2018ஆம் ஆண்டிலே, நல்லூர் பிரதேச செயலகத்தி னுள் புதிய கட்டடம் ஒன்றை அமைக்கும் பணியில் அந்த நிர்வாகம் ஈடுபட்டிருந்த போது, அங்கு தோண் டப்பட்ட ஆழமான குழியிலிருந்து புராதன காலத் துக்கு உரியதான மட்பாண்டத்துண்டுகள் ஏராளம் கிடைத்துள்ளன. இதன் பிரகாரம் அவை கி.பி. இரண் டாம் மூன்றாம் நூற்றாண்டுகளுக்கு உரியதென இனங்காணப்பட்டுள்ளன.

நல்லூரில் கிடைக்கப்பெற்ற சோழர் காலத்து மட்பாண் டங்கள் இக்கட்டுரை மூலம் வாசகர்களுக்கு விருந்தா கின்றன. இந்த நூலின் முதலாவது கட்டுரையே மிக வும் காத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளது. பெறுமதி யான ஒரு கைங்கரியத்தை யாழ் பல்கலைக்கழகத் தின் வரலாற்றுத்துறைத் தலைவரும் பேராசிரியரு மான செ.கிருஷ்ணராஜா படைத்துள்ளார். சிங்கை ஆரத்துக்கு வலுச்சேர்த்த கட்டுரை இதுவாகும். இரண்டாவது கட்டுரையும் யாழ்ப்பாணத் தமிழ் அரசர் பற்றிய வரலாற்றுக் கட்டுரையாகும்.







யாழ்பாடி பாணனின் வருகையும், வாலசிங்கனின் அரசாட்சியும், பண்ணை தொட்டு அரியாலை வரை யான மணற்றிடர் பரிசளிப்பும், புவனேகபாகுவின் அரசாட்சியும், அவனது பெருமையும், சிங்கை நகர் பிரகடனமும் கைலாயமாலை செப்பிய விதமும் கலா பூஷணமாக விளங்கும் அரியாலையூர் சிவநாமம் சிவதாசனுக்குப் புகழ் சேர்க்கிறது.


மூன்றாவது கட்டுரை மாமனிதர் கலைஞானிக்கும், எமக்கும் பேறளிக்கவல்ல ஒரு கட்டுரையாகும். கலை ஞானி அருங்காட்சியகத்தின் முன்னாள் இயக்குநர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தியால் இந்தக் கட்டுரை வரையப்பட்டுள்ளது. கலைஞானி அ.செல்வரத்தினம் மீண்டும் உயிர்த்தெழுகின்றார். ஷாந்தனின் குருபக்தி சிவபக்தியாகிறது. பலே!

நான்காவது கட்டுரை, பேராசிரியர் எஸ்.சிவலிங்க ராஜாவால் எழுதப்பட்ட "யாழ்ப்பாணத்தில் அச்சுக் கலை" வாசிப்போரை வரவேற்று உபசரிக்கின்றது. சுன்னாகம் திரு மகள் அச்சகம் ஆற்றிய சமயப்ப ணியும், தமிழ்ப்பணியும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை ஆகும்.

பேராசிரியரும், முன்னாள் துணைவேந்தருமாகிய கலாநிதி நா.சண்முகலிங்கன் எழுதிய, கிரா மியத்தாய் தெய்வங்கள் என்ற ஆன்மீகக் கட்டுரையானது, எம் மைக் கிராமங்களுக்கு அழைத் துச் சென்று கரங்கூப்ப வைக்கி றது. சைவப்புலவர் எஸ்.கே.என். தவராஜா வரைந்த "இறைநிலை விளக்கம்'' என்ற கட்டுரை, வானுக்குள் ஈசனைத் தேடும் நமக்கு ஊனுக்குள்ளே ஈசனை ஒளியேற்றுகின்றார். விரிவுரை யாளர் கலாநிதி பத்மராஜாவின் நல்லூரும் சூரசங்கா ரமும் என்ற கட்டுரை மும்மலங்களையும் அழித்து ஆன்மாக்களை ஆட்கொள்ளும் பாங்காகச் சிருட்டிக்கப்படுவது கருவாகிறது.

ஈழத்துச் சைவப்பண்பாட்டில், ஆடைகள் ஒரு நோக்கு என்ற கட்டுரையானது எம்மைச் சுயபரிசோதனை செய்ய உதவியுள்ளது. "தமிழ் கலாசாரப் பண்பாட்டு விழுமியங்கள்" என்ற தலைப்பில் விஜயசங்கரின் கட்டுரை ஆக்கம் வாசிப்போருக்கு வரம் தரவல்ல ஒரு படைப்பாகும்.

திருமதி வாசஸ்பதி ரஜீந்திரனது கர்நா டக சங்கீதம் பற்றிய கட்டுரை பிரம்மா தமாகக் கையாளப்பட்டுள்ளது. இசை கற்கும் மாணவர்களுக்கு வாய்த்த கட்டுரையாக வளம் தருகிறது. மற்றும் கவிதைகளும் சிறு கதைகளும் இந்த மலருக்கு இரம்மியம் சேர்க்கின்றன. பலருடைய ஆக்கமும் பாங்கான 'தீபம்' அச்சகத்தாரும் நினைவிலே இருக்கும் படியாக நீடுபுகழ்கொண்டு சிங்கை ஆரம் எம்மோடு இரண்டறக் கலந்துள்ளது. ■






கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையில் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் சமகால சர்வதேச அரசியல் போக்கு என்ற தலைப்பில் அண்மையில் சிறப்புக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. (ம)





காலையடி, மறுமலர்ச்சி மன்றத்தில் உலகத் தமிழ்க் கவிஞர் பேரமைப்பின் ஏற்பாட்டில் 'உலகத் தமிழ்க் கவிஞர் நாள்' நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ம)




# 'ஏர்முனை'
## சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு

■ குமுதன்


இயற்கை விவசாயத்துடன் தொடர்புடைய ஏர்முனை சஞ்சிகை வெளியீட்டு விழா வவுனியா வெளிக்குளம் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அமுதம் சேதன விவசாய உற்பத்தியாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் பா.நேசராஜா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இயற்கைவழி இயக்கம், நெடுங்கேணி பண்ணையாளர் சங்கத்தின் வெளியீடாக புதிய வெளிச்சம் அனுசரணையுடன் குறித்த சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலை நெடுங்கேணி பண்ணையாளர் சங்கத் தலைவர் பூபாலசிங்கம், ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் பத்மநாதன் ஆகியோர் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை மாணவன் ஒருவர் பெற்றுக் கொண்டார்.

நூலுக்கான அறிமுக உரையை நூலாசிரியர் சூ.சிவதாஸ் நிகழ்த்தினார். நிகழ்வில் விசேடமாக இயற்கை வழி விவசாயம் அல்லது சேதன விவசாயத்தின் முக்கியத்துவம் தொடர்பிலும் இனிவரும் காலங்களில் அதனை முன்னெடுக்க வேண்டிய முக்கியத்துவம் தொடர்பிலுமான கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெற்றிருந்தது.





# தாயுமானவர் குருபூசை

■ சி.கங்கானந்தி


*தாயுமானவரின் குருபூசையை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.*

தமிழ் நாட்டில் நாகபட்டினம் மாவட்டத்தில் திருமறைக்காடு என அழைக்கப்படும் வேதாரண்யத்தில் தாயுமானவர் பிறந்தார். தந்தை கேடிலியப்பர் தாயார் ஜெகவல்லி அம்மையார். இவர் வடமொழி தமிழ் மொழி ஆகிய இரு மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர் ஆவார். தாயுமானவர் திருச்சிராப்பள்ளியை ஆட்சி புரிந்த விஜயரகுநாத சொக்கலிங்கரிடம் அரச கணக்காளராகப் பணி புரிந்து அப்போது முக்கிய ஆவணம் ஒன்றை அரச சபையில் கையால் கசக்கிப் போட இவர் தன்னிலை மறந்து இறைவியுடன் ஒன்றிப் போய் இந்தக் காரியம் செய்ததை அறியாத சபையினர் அரசனுக்கும் அரசிக்கும் அவமரியாதை என அவதூறு பேசினார்கள்.

ஆனால் அதே சமயம் அகிலாண்டேஸ்வரி கோயிலில் அம்பாளின் ஆடையில் நெருப்புப் பற்றியதை அந்தணர்கள் கவனிப்பதற்குள் தாயுமானவர் நுழைந்து தம் கையால் கசக்கி அந்த நெருப்பை அணைத்ததை சிவாச்சாரியார்கள் கண்டனர். அவர்கள் உடனே ஓடோடி வந்து நடந்ததைக் கூற தாயுமானவரின் சக்தியைப் புரிந்து கொண்டு வியந்தனர். தம் எளிய பாடல்கள் மூலம் தமிழ்ச் சமயக் கவிதைக்கு ஒரு தூணாக விளங்கியுள்ளார்.

தாயுமான சுவாமிகள் திருப்பாடல் திரட்டு என்னும் நூலில் 36 தலைப்புகளில் 1452 பாடல்கள் உள்ளன. அவற்றில் 771 பாடல்கள் கண்ணிகளாகவும், 83 பாடல்கள் வெண்பாக்களாகவும் உள்ளன. இவருடைய 'பராபரக் கண்ணி' மிகவும் புகழுடையது. மட்டுவார் குழவி என்னும் மங்கையை மணந்து வாழ்ந்தார். பின் துறவு வாழ்க்கையில் நாட்டம் பூண்டு திருமூலர் மரபில் வந்த மௌனகுரு என்பாரின் அருளும் ஆசியும் பெற்று ராமநாதபுரம் இலட்சுமிபுரம் என்னும் இடத்தில் சமாதி அடைந்தார்:

# சமாதான நீதிவான் நியமனம்



சண்முகம் கருணாகரன் இலங்கைத்தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக மல்லாகம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராசா முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார். இவர் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை, அச்சுவேலி மகா வித்தியாலயம் (மத்திய கல்லூரி), புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி, யாழ் ஆரியகுளம் புதிய உயர்கலைக் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவர் ஆவார்.

பிரபல சமூக சேவையாளரான இவர் மல்லாகம் வடக்கு சர்வோதய சிரமதானச் சங்கத் தலைவராகவும், சர்வோதய நீதிசார் சேவைகள் இயக்கச் செயலாளர் ஆகவும் பொலிஸ் சிவில் பாதுகாப்புக் குழுவின் உபதலைவராகவும் சேவையாற்றியுள்ளார். மேலும் தையிட்டி கிழக்கு பலாலி பொலிஸ் சிவில் பாதுகாப்பு உபதலைவராகவும், வலி.வடக்கு மஸ்தியஸ்தர்கள் சபை உறுப்பினராகவும் செயற்பட்டுவருகிறார். (ம)





# ஆவின அறவோர் அமைப்பினது ஏற்பாட்டில் மிகச் சிறப்பாக இடம்பெற்ற பொங்கல் விழா!

ஆவின அறவோர் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழர் மரபுவழி உழவர் திருவிழாவும், பட்டிப் பொங்கலும் அண்மையில் மிகச் சிறப்பாக இடம்பெற்றன. இந்த விழாவில் கோபூஜை பிரதான அம்சமாக அமைந்தது. பசு எமது தமிழர் மரபு வழி பண்பாட்டில் முக்கிய இடம்பெறுகின்றது. சமய நிகழ்ச்சியாக இருந்தாலும்சரி ஏனைய கலாசார நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி பசு உயரிய பயன் தரும் ஓர் உயிரியாக இருந்து வந்துள்ளது. பசுவின் பயன்கள் வழியே ஏனைய வேள்விகளும் பூஜை வழிபாடுகளும் யாகங்களும் அமைந்து வந்திருக்கின்றன.

'ஆ பயன் குன்றும் அறு தொழிலோர் நூல் மறப்பர் காவலன் காவன் எனில்' என்ற வாக்குக்கு இணங்க, அரசன் நீதி தவறிவிட்டால் கோள்களின் போக்கு நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு வானம் பொய்த்து விடும். பசும் புற்தரை காணும் நிலை இல்லாதுபோய் பசுவுக்கான உணவு அற்று பசுவின் பயன் குன்றி அது தொழிலோர் ஆற்றும் வேள்விகளும் யாகங்களும் பிறவும் இல்லாது போய் நச்சு வளையமாக உலகத்தியல்பு மாறி மானிலத்து உயிர்கள் மாண்டு மடியும் நிலைதான் ஏற்படும். எனவே கோமாதா உலக இயக்க நிலையில் ஓர் மூலாதாரமான ஓர் உயிரியாக இருப்பதை உணர முடியும்.

ஆனால் இன்றைய யதார்த்த நிலைதான் என்ன?. எல்லா உயிரினங்களும் இறைவனின் படைப்புக்கள். இன்பத்தை நாடி உழைப்பவை. அதிலும் கோமாதா மிக முக்கியமான ஓர் உயிரியாக இருக்கும்போது அதனைக் கொன்று தின்று வாழும் நிலை இன்று அமைந்து விட்டது.

எனவே இவ்வாறான விழாக்கள் மூலம் கோமாதாவின் பங்கையும் பயனையும் புனிதத்தையும் அனைவரும் அறிய பறை அறைவது அவசரமும் அவசியமும் ஆன ஒன்றாகி விட்டது. இவ்வாறானதோர் பணியினைச் சரிவர புரிந்துள்ளது ஆவின அறவோர் அமைப்பு. இந்த வகையில் இந்த விழா மரபு சார்ந்த விழுமியங்களையும் எம்மவர் மத்தியில் சிறப்புற நிலை பெறச் செய்யும் என்பதில் எது வித ஐயப்பாடும் இல்லை.

இது தொடர்பில் ஆவின அறவோர் அமைப்பின் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில், சிலர் விமர்சனம் செய்வது போன்று இது ஒரு கட்சி சார்ந்த செயற்பாடு அன்று. எமது அமைப்பு ஒரு நடுநிலையான அமைப்பாகும். இருந்தபோதிலும்கூட தமிழர் மரபு வழிசார் நிகழ்வாகிய இதற்கு யாம் தமிழ்க் கூட்டமைப்பின் அனைத்து நிலையினரதும் உதவியை நாடி நின்றோம். இங்கு மனம் உண்டானால் இடம் உண்டு என்ற வகையில் குறித்த தொகுதியினர் எமக்கு ஆதரவு அளித்துள்ளனர். ஆனால் இவ்விழா அனைவருக்குமான ஒருவிழா என்ற வகையில் ஏற்பாட்டாளராகிய நாம் ஏற்பாடு செய்திருந்தோம். இவ் அறப்பணி எமது மரபு தழுவிய அரும் பணி. எனவே இப்பணி எல்லோருக்கும் இன்பம் தரும் ஒரு பணியாகும் என்றார் பெருமிதத்துடன்.



# மேழிச்செல்வம் கோழைபடாது

**கருடன்**

உழவர்களின் வெற்றித்திருநாளே தைப் பொங்கலாகும். அதுவே தமிழர்களின் திரு நாளாகும். இயற்கை எமக்களித்த மிகப் பெரிய வரம் விவசாயமே ஆகும். விவசாயி ஒருவனாலேயே உலகின் பசியை விரட்டமுடியும். அவனை அரசுகள் கவனிக்காத போது நாடு வறுமையில் சிக்கித் தவிக்கும். உழவர்களின் ஆசியினாலும், அரவணைப்பினாலுமே நாம் முழுமையான ஆரோக்கியமாக வாழவும் முடிகிறது. வெல்லவும் முடிகிறது.

உழவர்கள் வஞ்சகம், சூது, களவு. பொய் சொல்லாமல் நேர்மையாகவும், நேர்த்தியாகவும் மண்ணைப் பொன்விளையும் பூமியாக மாற்றுகின்றமையால் மந்தைகள் கூட மனிதமாக வாழத் தொடங்கின. மாடுகளும், ஆடுகளும் உழவர்களோடு சேர்ந்து வாழத் தொடங்கின. அவர்களின் நேர்மையைக் கண்டு ஐம்பூதங்களின் அனுக்கிரகம் துணை செய்தது. மேழிச் செல்வம் தோற்பதில்லை. சூரியனே தமது விளைச்சலுக்கு மூலகாரணம் என நினைந்து பயிர் செய்தான், அவனுக்கு பூஜையும், படையலும், வழிபாடும் ஆற்றி, நன்றி செய்யும் பண்டிகையே தைப் பொங்கலாகும், ஆரம்பகாலப் பகுதியானது மக்கள் அனைவருமே விவசாயத்தையே முதன்மைத் தொழிலாக மேற்கொண்டமையால் நெல் அறுவடை முடிந்தகையோடு புதிரெடுத்து நெல்மணியாக்கி, அரிசியாக்கி, மெல்லென உரலில் தீட்டி, தவிட்டுப் பிடியோடு சுளகில் கொழித்து கொத்திலே முட்டமுட்ட அளந்து வைப்பர். தை மாதப் பிறப்பன்று அதிகாலை எழுந்து நீராடி முற்றத்தில் சாணியால் மெழுகி கோலமிடுவர். பானை பொங்கித்தள்ளும். பொங்கல் சிறப்புறும்.

மேழிச் செல்வம் என்பது, உழுது பயிரிட்டு அனுபவிக்கும் வேளாண்மைச் செல்வமாகும். அந்த அற்புதமான செல்வம் ஒருபோதும் குறைவுபடாது, நிறைவாகவே வீட்டிலும், நாட்டிலும் பொலிந்து வாழ்வு தரும். இந்நிலையில் பொன்கொழிக்கும் நம் பூமியானது மேழிச் செல்வத்தினால் ஒவ்வொரு தைப்பொங்கலையும் அதிசயமாக்கிட ஆன்மிகவாதிகளும், அரசியல்வாதிகளும் விவசாயப் பெருமக்களைப் பெறுமதியாக்குவோமாக இருந்தால் தமிழரின் எந்தப் பண்டிகையும் சோர்வுபடாது.

# மண்ணையும் மக்களையும் பங்கையும் அன்பு செய்தவர் அமரர் தொம்மையப்பு



**அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை**
ஊடக வருகை விரிவுரையாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

சின்னத்துரை வாத்தியார் என அன்போடு அழைக்கப்பட்ட இரணைப்பாலை பங்கைச் சேர்ந்த ஓய்வுநிலை அதிபர் தேவசகாயம் தொம்மையப்பு தனது 92வது வயதில் கடந்த 5ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் திருச்சிலுவை கன்னியர் சுகநல நிலையத்தில் இறைபதம் அடைந்துள்ளார்.

அமரர் தேவசகாயம் தொம்மையப்பு இரணைப்பாலை கிராமத்தின் முதலாவது குருவான தொம்மையப்பு யேசுதாசன் சந்திரன் அடிகளாரது (விரிவுரையாளர் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி) தந்தை ஆவார். மெல்லிய உயர்ந்த உருவத்தில் நிமிர்ந்த கம்பீர நடையில் அன்பு மிளிரும் புன்னகையில் அடக்கமான அன்பான பேச்சில் ஆடம்பரமில்லாத அமைதியான வாழ்வில் 92 ஆண்டுகள் வாழ்ந்த இவர் இறைவனால் நிறைவாக ஆசீர்வதிக்கப்பட்டவர். இவர் குருக்கள் மட்டில் விசேட அன்பும் அக்கறையும் மரியாதையும் உடையவர். தனது பங்கில் பணியாற்றிய குருக்களுக்கு என்றும் பக்கபலமாக இருந்தார் என்பதற்கு அங்கு பணியாற்றிய குருக்கள் சான்று பகர்வார்.

தேவசகாயம்பிள்ளை ஞானப்பு தம்பதிகளின் ஐந்தாவது பிள்ளையாக மாத்தளன் மண்ணில் 1927ஆம் ஆண்டில் பிறந்தார். இளவாலை உரோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் கல்வியை தொடர்ந்த இவர் அப்பாடசாலையில் சிறந்த மாணவனாகத் திகழ்ந்து பரீட்சையில் திறமைச் சித்திபெற்று 1948-1949 ஆண்டு காலப்பகுதியில் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெற்று பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளிவந்தார்.

1950ஆம் ஆண்டில் பொகவந்தலாவை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் உதவி ஆசிரியராகப் பணியைத் தொடர்ந்தார். பின்னர் தமது சொந்த ஊராகிய மாத்தளனுக்கு 1951ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்றார். ஆறு ஆண்டுகள் தன் சொந்த மண்ணான மாத்தளனில் பணியாற்றிய பின் 1957இல் புதுக்குடியிருப்பு உரோமன் கத்தோலிக்க பாடசாலையில் உதவி ஆசிரியரானார். இங்கு ஓராண்டு கல்விப் பணியை முடித்த பின்பு தலைமை ஆசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டு 1958 தொடக்கம் 1966வரை எட்டாண்டுகள் இரணைப்பாலை உரோமன் கத்தோலிக்க பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்குக் கடுமையாக உழைத்தார். 1966ஆம் ஆண்டில் அளம்பில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலைக்கு மாற்றலாகி தலைமை ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். இரண்டாண்டு சேவைக்குப் பின்பு மீண்டும் இரணைப்பாலைக்கு மாற்றலாகி 1968 தொடக்கம் 1976 வரை மீண்டும் எட்டாண்டுகள் தனது பணியை இரணைப்பாலையில் அர்ப்பணிப்போடு மேற்கொண்டார். பதினாறு ஆண்டுகள் இரணைப்பாலைக் கிராமத்தின் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய பெருமை இவரைச் சாரும். 1976இல் அம்பலவன்பொக்கணை அரச தமிழ் கலவன் பாடசாலையின் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி இரண்டாண்டு சேவையின் பின்பு அதிபராகத் தரம் உயர்த்தப்பட்டு 1978 தொடக்கம் 1987வரை ஒன்பதாண்டுகள் புதுக்குடியிருப்பு உறோமன் கத்தோலிக்க பாடசாலையின் அதிபரானார்.

இவர் மாத்தளனில் பீடப் பணியாளராக திருப்பலிப் பண்டக் காப்பாளராக திருப்பலிக்கு ஆர்மோனியம் இசைப்பவராக பாடகர் குழாமை வழி நடத்துபவராக பன்முகப் பணிகளை ஆற்றியவர். மாத்தளன் இரணைப்பாலைக் கிராமங்களின் முதல் ஆசிரியர் என்ற பெருமையைப் பெற்ற இவர் சமூகக் கடமைகளில் மிக ஆர்வத்தோடு செயற்பட்டார். 2000ஆம் ஆண்டு இக்கிராமத்தின் வளர்ச்சி கருதி மிகப் பெறுமதியான தன் காணியை இரணைப்பாலைக் கிராமத்திற்கு நன்கொடையாகக் கொடுத்தார். இறுதிக் காலத்தில் சுகவீனமுற்றபோது தன்னுடைய துன்பங்களையும் முதுமைக்கால இயலாமையையும் இறைவனின் சித்தமாக அமைதியோடும் பொறுமையோடும் ஏற்று இறுதிவரை நிறைவான வாழ்வு வாழ்ந்தார். இவரின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாறட்டும்.

# காணிப் பிணக்குகளை தீர்ப்பதில் வல்லுநராகத் திகழ்ந்தவரே மறைந்த க.ம.இராஜேந்திரன்

**நவாலியூர் செல்வராஜா ரமேஷ்**

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின் யாழ். மாவட்ட காணி சிறப்பு மத்தியஸ்த சபையில் தன்னை முழுமையாக மக்கள் பணிக்காக அர்ப்பணித்துச் சேவையாற்றிய லயன் க.ம இராஜேந்திரன் அண்மையில் அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அமரர் இராஜேந்திரனை வடக்கு மாகாணத்தில் தெரியாதவர்கள் எவருமே இருக்கமுடியாது என்று சொல்லுமளவுக்கு வடக்கு கிழக்கு மாகாணத்தில் பல்வேறு இடங்களிலும் அரச பணியை முன்னெடுத்த சேவையாளனாக இனம்காணப்பட்டார்.

அமரர் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் மாவட்ட அபிவிருத்திச் சபையில் மூத்த கணக்காளராகவும், பின்னர் மட்டக்களப்பு மாநகர சபையின் கணக்காளராகவும், இதன் பின்னர் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட நெக்கொட் நிறுவன கணக்காளராகவம் பணியாற்றிய பின்னர் இறுதியாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கணக்காளராகவும் மிக சிறந்த பணியை அர்ப்பணிப்புடன் முன்னெடுத்தார்.

இதே வேளையில் இறுதியாக யாழ். மாவட்ட காணி சிறப்பு மத்தியஸ்த சபையில் மூத்த மத்தியஸ்தராக துடிப்புடன் மக்களுக்காகப் பணியாற்றிய வேளையில் திடீரென செவிகளுக்கெட்டிய மரணச் செய்தி கேட்டு எல்லோர் மனதையும் ஒரு கணம் கஷ்டத்துக்குள்ளாக்கியுள்ளதை எவராலும் உணரமுடிந்தது.

பேசும் போது எல்லோரிடமும் இனிமையாகவும் அன்பாகவும் பண்பாகவும் உறவாடும் தன்மை கொண்ட லயன் க.ம. இராஜேந்திரன் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஆவார். இவர் கோண்டாவில் ஞான வீர சனசமூக நிலையம், கோண்டாவில் லயனஸ் கழகம் ஆகியவற்றின் தலைவராகவும் மிகச் சிறந்த சேவையை வழங்கிப் பணியாற்றியிருந்தார்.

இதனை விட கோண்டாவில் ஞான வீர சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம், கோண்டாவில் செம்மாந்தோட்ட ஞானவைரவர் ஆலயம், வடமாகாண இந்து அமைப்புக்களின் .ஒன்றியம் போன்றவற்றில் பொருளாளராகவும் நிதியியல் பணியை முன்னெடுத்த செம்மலாக வலம் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொண்டாடப்பட வேண்டியவரே அமரர் கலாபூஷணம் பேர்மினஸ்

**எஸ்.ரி.அருள்குமரன்**

ஈழத்து அரங்கப்புலம் காலம்தோறும் செழுமைமிக்க கலைஞர்களைப் பிரசவித்துக் கொண்டிருக்கின்றது. ஆற்றல் மிக்க ஆளுமையான அரங்கக் கலைஞர்கள் அரங்கப்புலத்துக்குத் தங்களது அர்ப்பணிப்பு மிக்க செயற்பாட்டினால் ஆற்றிய பணிகள் காலத்தை விஞ்சி நிற்கும் என்பது கண்கூடு.

வாழும்போது கலைஞனைக் கொண்டாடுவதுடன் அவனது இறப்பின் பின்னர் அவனைப் பற்றி நினைவுகூர்தல் என்பது அக்கலைஞனை நினைவுகூர்தல் என்பதற்கு அப்பால் அக்கலைஞன் பற்றிய பிரக்ஞைகளை இளையதலைமுறையினருக்கும் எதிர்காலச் சந்ததிக்கும் கடத்திச் செல்வதற்குத் துணை செய்யும் என்பது யதார்த்தமாகும்.

இப்புலத்தில் கொண்டாடப்பட வேண்டியவராகவும், நினைவு கூரப்பட வேண்டியவராகவும் அடுத்த தலைமுறை கண்டுகொள்ளப்படக் கூடிய வகையில் அவர் பற்றிய விடயங்களை சொல்ல வேண்டிய அற்புதமான கலைஞராகவும் பேர்மினஸ் விளங்குகின்றார்.

இளையவர்களுடன் அவர் உரையாடுகின்ற பாணியே தனித்துவமானது. அவருடன் பேசுகின்றபோது நாம் பெற்றுக்கொள்கின்ற அனுபவங்கள் அலாதியானவை. காத்திரமானவகையில் கலையைத் தனது மூச்சாகக் கொண்டு வாழ்ந்த கலைஞனது நினைவுகளைத் தாங்கிய வகையில் அவரது ஓராண்டு நினைவு நாளில்




'அரங்கவாரிதி' எனும் அமரர் கலாபூஷணம் பேர்மினஸின் ஓராண்டு நினைவு மலர் வெளிவந்துள்ளது.

யோ.யோன்சன்ராஜ்குமார், கொ.கரன்சன், அன்ரனி பேர்மினஸ் ஆகியோரை மலர் ஆசிரியர்களாகக் கொண்டு வெளிவந்துள்ள இம் மலரில் அவரது வாழ்க்கைக் குறிப்புக்கள், பெற்றுக்கொண்ட விருதுகள், நடித்த நாடகங்களது பட்டியல்கள், வழங்கிய நேர்காணல்கள், அவர் ஆக்கிய கட்டுரைகள் அவரது வாழ்வியல் மற்றும் அரங்கப் புகைப்படங்கள், அவர் பற்றி அரங்கத்துறை சார்ந்தவர்கள் மற்றும் உறவுகளது அனுபவக் குறிப்புக்களை உள்ளடக்கிய வகையில் மலர் காணப்படுகின்றமை சிறப்பிற்குரியதாகும்.



# இன்றைய நாள்

**மேஷம்:** அடுத்தவர் மீதான நம்பிக்கை குறையும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். சராசரி பணவரவு உண்டு. உடல்நலத்தில் கவனம் வேண்டும்.

**இடபம்:** பலரும் நல்ல எண்ணம் கொள்வர். உற்சாக மனதுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி திட்டமிட்டபடி நிறைவேறும்.

**மிதுனம்:** நண்பரிடம் சொந்த விஷயம் பேசுவீர்கள். உபரி வருமானத்தில் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**கடகம்:** செயல் நிறைவேற தாமதம் ஆகலாம். அனுபவசாலியின் ஆலோசனையால் வழிகாட்டுதல் கிடைக்கும். தொழில், வியாபார நடைமுறை சீராக இருக்கும். மிதமான அளவில் பணவரவு கிடைக்கும்.

**சிம்மம்:** செயல்களில் கவனச் சிதறல் ஏற்படலாம். தொழில், வியாபாரம் சிறக்க கூடுதல் உழைப்பு உதவும். வரவை விட செலவு அதிகரிக்கும். பிள்ளைகளின் நற்செயலால் மனதில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கன்னி:** சந்தோஷ சிந்தனைகள் உற்சாகப்படுத்தும். சிறு செயலையும், நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேறும். தாராள பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** நற்செயலை சிலர் கேலி செய்வர். உண்மை, நேர்மைக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள குறையை சரிசெய்ய அதிகம் பணிபுரிய நேரிடலாம்.

**விருச்சிகம்:** நண்பர்களால் பெருமைப்படுவீர்கள். ஆன்மிக உரையாடலில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்து நம்பிக்கை வளரும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**தனுசு:** மனதில் அதிக எதிர்பார்ப்பு உருவாகும். தொழில், வியாபாரம் மந்த கதியில் இயங்கும். அளவான பணவரவு கிடைக்கும். வெளியூர்ப் பயணத்தில் மாறுதல் ஏற்படலாம்.

**மகரம்:** தாயின் அன்பு, ஆசி கிடைக்கும். பணிகளைதிறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். ஆதாய பணவரவை சேமிப்பாக மாற்றுவீர்கள்.

**கும்பம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் பேசவேண்டாம். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட தன்மை காணப்படும். குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள்.

**மீனம்:** முயற்சிக்குரிய பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த தொந்தரவு விலகும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும். இஷ்ட தெய்வ வழிபாடு செய்வீர்கள்.



## அமெரிக்கத் தூதரகம் நோக்கி

# சீறிப் பாய்ந்தன ஏவுகணைகள்!

தெஹ்ரான், ஜன. 22

ஈராக்கில் பாதுகாப்பு நிறைந்த பசுமைப் பகுதிக்குள் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தை இலக்குவைத்து மூன்று ஏவுகணைகள் நேற்று வீசப்பட்டன. அவற்றில் இரண்டு தூதரகத்துக்கு மிகமிக அருகில் விழுந்து வெடித்தன என்று சர்வதேச ஊடகங்களின் செய்திகள் குறிப்பிடுகின்றன.

தாக்குதலுக்கு ஈரானோ அல்லது வேறெந்த அமைப்போ பொறுப்பேற்கவில்லை. எனினும் ஈரான் அல்லது ஈரானின் ஆதரவுபெற்ற ஆயுதக் குழுக்கள் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று அமெரிக்கா சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன் தாக்குதலுக்குக் கடும் கண்டனமும் தெரிவித்துள்ளது. (ம)



சூடானில் பஞ்சத்தின் காரணமாக ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் நோயினால் பாதிக்கப்பட்ட சிங்கங்களுக்கு உதவுமாறு சமூக வலைத் தளங்களில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கம்பீரமிக்க சிங்கங்களின் நலிந்த உடல்தோற்றம் தொடர்பான ஒளிப்படங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. (ம)

# மனைவிக்காக...!

லண்டன், ஜன. 22

மனைவிக்காக இங்கிலாந்து அரச குடும்பத்திலிருந்து விலகுவதைத் தவிர வேறு வழியில்லை என்று இளவரசர் ஹாரி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து இளவரசர் ஹாரி மற்றும் அவரது மனைவி மேகன் மார்கல் ஆகிய இருவரும் இங்கிலாந்து அரச குடும்பப் பதவிகளிலிருந்து விலகுகின்றனர் என கடந்த வாரம் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து அரச குடும்பத்தினருடன் நடந்த ஆலோசனைக்குப் பிறகு, அவர்களின் முடிவுக்கு ராணி எலிசபெத் ஒப்புதல் வழங்கினார்.

அரச குடும்பத்திலிருந்து விலகிய முடிவு குறித்து ஹாரி தொண்டு நிறுவனம் ஒன்றுக்கு முதல் முறையாக பதிலளித்துள்ளார்.

'இங்கிலாந்து அரச குடும்பத்திலிருந்து விலகுவதைத் தவிர வேறு வழியில்லை. இந்த முடிவை எனது மனைவிக்காகவே எடுத்தேன். அரச குடும்பத்திலிருந்து விலகும் இம்முடிவை நான் எளிதாக எடுக்கவில்லை. இங்கிலாந்து எப்போதும் எனது தாய்நாடுதான். அதில் எப்போதும் மாற்றமில்லை - என்றார். (ம)



# சுலைமானியின் சாவுக்கு பழிவாங்கியே தீருவோம்!

## புரட்சிப் படைத் தளபதி இஸ்மாயில் கானி கொதிப்பு

தெஹ்ரான், ஜன. 22

தளபதி சுலைமானியைக் கோழைத்தனமாகக் கொன்ற அமெரிக்காவைப் பழிவாங்கியே தீருவோம் என்று ஈரான் புரட்சிப் படைத் தளபதி இஸ்மாயில் கானி தெரிவித்துள்ளார்.

ஈரான் புரட்சிகரப் பாதுகாப்புப் படையின் தளபதி குவாசிம் சுலைமானி அமெரிக்காவால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, துணைத் தளபதியான இஸ்மாயில் கானி அப்பதவியை ஏற்றார். இந்த நிலையில் சுலைமானி கொல்லப்பட்டதற்கு நிச்சயம் அமெரிக்காவைப் பழிவாங்குவோம் என்று படை அறிமுக விழாவில் இஸ்மாயில் தெரிவித்துள்ளார். இதுகுறித்து இஸ்மாயில் கானி கூறும்போது, 'தளபதி சுலைமானியை அமெரிக்கா கோழைத்தனமாகக் கொன்றுள்ளது. கடவுளின் ஆசிர்வாதத்தாலும் சுலைமானி யின் குருதிக்குப் பழிவாங்க விரும்புபவர்களின் முயற்சிகளாலும் எதிரிகள் நிச்சயம் பழிவாங்கப்படுவார்கள்" என்றார்.

முன்னதாக, ஈராக்கிலுள்ள அமெரிக்க ராணுவ நிலை மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில், அமெரிக்காவைச் சேர்ந்த தனியார் பாதுகாப்புப் படை வீரர் உயிரிழந்தார்.

அந்தத் தாக்குதலை, ஈரான் ஆதரவு பெற்ற கடாயெப் ஹிஸ்புல்லா படையினர் நடத்தினர். இதற்குப் பதிலடியாகவே அந்தப் படையினர் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் 25 வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து காபூலிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பு ஏராளமான ஹிஸ்புல்லா ஆதரவுப் போராட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு அலுவலகத்தைத் தாக்கினர்.

அதற்குப் பதிலடியாக பாக்தாத் விமான நிலையம் அருகே அமெரிக்க ராணுவம் ஆளில்லா விமானம் மூலம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது.

இதில் ஈரான் புரட்சிகரப் பாதுகாப்புப் படையின் தளபதி குவாசிம் சுலைமானி, ஈராக்கின் ஹஸ் அல் ஷபாபி துணை ராணுவப் படையின் துணைத் தலைவர் அபு மஹதி அல் முஹன்திஸும் ஆகியோர் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஈரான் இடையே மோதல் வலுத்துள்ளது. (ம)

## தமிழுக்கு...

மன்னாரில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் பனந்தும்பு உற்பத்தி நிலையத்தின் மும்மொழி பெயர்ப் பலகையைத் திறந்து வைத்த அமைச்சர் விமல் வீரவன்ச, அந்தப் பலகையில் முதலில் இருந்த தமிழ்மொழி எழுத்துக்களை மாற்றி முதலில் சிங்களத்தில் எழுதப்பட வேண்டும் என பனை அபிவிருத்தி சபைத் தலைவருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார். தமிழில் முதலில் எழுதப்பட்ட மும்மொழி பெயர்ப்பலகை மாற்றப்பட்டு, தற்போது சிங்களத்தில் முதலில் எழுதப்பட்ட மும்மொழி பலகை பொருத்தப்பட்டுள்ளது. இது தமிழ் மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் தற்போது அமைச்சர் விமல் வீரவன்ச நேற்று மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் என்ற நினைப்பை தமிழ் மக்கள் மறக்க வேண்டும். வடக்கு, கிழக்கு உள்ளடங்கிய இந்த இலங்கை நாடு சிங்கள பௌத்த நாடு. இங்கு சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்துக்கும்தான் முதலிடம் வழங்க முடியும்.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் உள்ள சகல அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் பெயர்ப் பலகைகளில் சிங்கள மொழியே முதலிடத்தில் இருக்க வேண்டும். இரண்டாவது இடமே தமிழ் மொழிக்கு வழங்க முடியும்.

சிங்களவர்கள் இந்த நாட்டின் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். தமிழர்கள் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். இதைத் தமிழர்களே ஒத்துக்கொண்டுள்ளார்கள். அதனால் தமிழ் மொழிக்கு எப்படி முதலிடம் வழங்க முடியும்? எந்தக் காரணம் கொண்டும் தமிழ் மொழிக்கு முதலிடம் வழங்க முடியாது. அதையும் மீறி தமிழுக்கு முதலிடம் வழங்க சிங்களவர்கள் முட்டாள்கள் அல்லர்.

சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளினால்தான் இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ராஜபக்ச ஆட்சியில் சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்துக்கும்தான் முதலிடம் வழங்கப்படும்.

அதற்காகத் தமிழர்களை நாம் புறக்கணிக்கின்றோம் என்று எவரும் கருதக்கூடாது. அவர்கள் இந்த நாட்டின் இரண்டாம் தரப் பிரஜைகள். அவர்களையும் அரவணைத்துக்கொண்டு எமது செயற்பாடுகளை முன்னெடுப்போம்-என்றார். (ஏ-22)

## சுகாதார...

மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் மீது இனந் தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

இந்தத் தாக்குதலில் சுகாதாரத் தொழிலாளர்கள் இருவர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக 4 சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நகரில் உள்ள வடிகானில் இருந்து அகற்றப்பட்ட கழிவுப் பொருள்களை ஏற்றிச் சென்ற மாநகர வாகனத்தை நாவலர் வீதியில் மணிக்கூண்டுச் சந்திப் பகுதியில் இனந் தெரியாதவர்கள் வழிமறித்தனர் என்றும். கழிவகற்றும் வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளரைத் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் யாழ்ப்பாணம் மாநகர சபையால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் நான்கு பேரைக் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஏ-17)

## டெங்கு...

எவரும் வவுனியாவில் இனங்காணப்படவில்லை என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினர் தெரிவித்தனர்.

சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவினரால் வாராந்தம் வெளியிடப்படும் புள்ளி விவரத்திலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இறுதி மாதங்களில் டெங்கு நோய்த் தொற்று நாட்டு மக்களைப் பெரிதும் அச்சுறுத்தியிருந்தது. சடுதியாக டெங்குத் தொற்றால் இலங்கையில் உள்ள முதன்மை வைத்தியசாலைகள், முதற்கொண்டு, பிரதேச, ஆதார வைத்திய சாலைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. வைத்தியசாலை விடுதிகள் நிரம்பி, நோயாளர்களைப் பராமரிக்க முடியாத நிலையும் ஏற்பட்டிருந்தது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகளவானோர் டெங்குத் தொற்றுக்கு இலக்காகியிருந்தனர். அடுத்தபடியாக வவுனியா மாவட்டமே இனங்காணப்பட்டிருந்தது.

நடப்பாண்டில் ஜனவரி மாதத்தின் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் வவுனியா மாவட்டத்தில் டெங்குத் தொற்றுக்குள்ளான எவரும் இனங்காணப்படவில்லை என்று தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆண்டின் இறுதியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டன. டெங்குத் தரிசிப்புக்கள் பரவலாக இடம்பெற்றன. நகரப் பகுதி சுகாதாரப் பிரிவினரின் கண்காணிப்பில் இருந்தது. டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்குப் பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். சுகாதாரப் பிரிவினர் எடுத்த கடும் முயற்சியின் பயனாக டெங்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஜனவரி மாதம் 20 ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் 254 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் 20 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். கடந்த காலங்களில் டெங்குத் தொற்றுக் காணப்படாத மன்னார் மாவட்டத்தில் 19 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 பேர் டெங்குத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவினர் தெரிவித்தனர். (ஏ-21)

## பல்கலைக்...

வர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

பல்கலைக் கழகக் கல்லூரிகளை மூடுவதற்கு அரசு எடுத்துள்ள முடிவுக்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம் என்று கூறிய மாணவர்கள், இந்த முடிவை அரசு எடுக்கக் கூடாது என்றும் தெரிவித்தனர்.

புதிய அரசு தற்போது பதவியேற்றுள்ள நிலையில் நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகக் கல்லூரிகளையும் எதிர்வரும் மார்ச் மாதம் முதல் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த முடிவைக் கண்டித்து நாடளாவிய ரீதியில் பல்கலைக் கழகக் கல்லூரி மாணவர்கள் போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர். அந்தப் போராட்டங்களுக்கு வலுச் சேர்க்கும் வகையில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகக் கல்லூரி மாணவர்களும் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். (ஏ-20)

## காணி...

தப் பகுதி மக்களின் கடும் எதிர்ப்பால் இடைநிறுத்தப்பட்டன.

இந்தப் பகுதியைச் சுவீகரிப்பதற்கு கடந்த காலங்களிலும் நில அளவீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு, மக்கள் எதிர்ப்பால் இடைநிறுத்தப்பட்டிருந்தன. நேற்றும் நில அளவைப் பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அந்தப் பகுதிக்கு நில அளவைத் திணைக்களத்தினர் வந்திருந்தனர். அங்கு கூடிய பொதுமக்கள் நில அளவீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். யாழ். மாநகரப் பிரதி முதல்வர் ஈசன், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் மக்களுடன் இணைந்து எதிர்ப்புத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் சுதர்சன் சம்பவ இடத்துக்கு வந்து, காணி சுவீகரிப்புத் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளித்தனர். மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்புத் தெரிவித்ததால் நில அளவீட்டுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன. மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதால் அது தொடர்பாக ஆராய்ந்த பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

காணிகளைச் சுவீகரிக்க எதிர்காலத்தில் முயற்சிகள் எடுக்கப்பட்டால் யாழ். மாவட்ட செயலகம், வடமாகாண ஆளுநர் அலுவலகம் மற்றும் பிரதேச செயலகத்தை முடக்கிப் போராட்டம் முன்னெடுக்கப் படும் என்று அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ஏ-க-106,20)

## அரசிய...

தமிழ்த் தேசிய முன்னணியின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி சுகாஷ்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"அடுத்த பொதுத் தேர்தல் நெருங்கியுள்ள சூழலில், அதையொட்டி தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குகளைச் சூறையாடும் நாடகத்திலே தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இறங்கியுள்ளனர். குறிப்பாக கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன், கடந்த காலங்களில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை மறந்து போனவராக, தமிழ் மக்களை எப்படி ஏமாற்றினார் என்பதை மறைத்து, இப்போது அரசாங்கத்தை எதிர்ப்பதுபோல பாசாங்கு செய்யத் தொடங்கியுள்ளார். இந்தப் பாசாங்கு இனியும் தமிழர்களிடம் எடுபடாது.

தன்னுடைய நெருங்கிய நண்பரான ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்று முதல் சுமந்திரன் கடந்த 5 வருடங்களாகத் தொடர்ச்சியாகச் சொல்லி வரும் விடயம், 'ரணிலின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு ஓர் தீர்வைப் பெற்றுத்தருவோம். அவ்வாறில்லாவிட்டால் பதவி விலகுவதோடு, அரசியலில் இருந்தும் ஒதுங்குவேன் ' என்பது தான்.

ஆனால் ரணில் அரசின் ஆட்சியும் முடிந்து அடுத்த தேர்தலும் வரப்போகின்ற நிலையில், புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படவேயில்லை. எனவே எப்போது சுமந்திரன் பதவி விலகப் போகிறார்? உங்களின் மென்வலுவும், இராஜதந்திரமும் தோல்வியடைந்துவிட்டது. இதுவரை தமிழ் மக்களை நீங்களும், சம்பந்தர் தலைமையிலான கூட்டமைப்பும் ஏமாற்றியது போதும். இனியும் மக்களை ஏமாற்ற முற்பட்டால் அது தமிழினத் துரோகமாகவே கொள்ளப்படும்" என்று தெரிவித்தார். (அ)

## குளத்தில்....

உயிரிழந்தவர் 60 வயதுடையவர் என்றும், அந்தப் பகுதியில் போக்கிடம் இன்றி நடமாடுபவர் என்றும் அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இவர் குளத்தில் குளிப்பதை அந்தப் பகுதி மக்கள் கண்டுள்ளனர். சிறிது நேரத்தின் பின்னர் அவரைக் காணவில்லை. அவரது உடமைகள் குளத்தின் கரையோரம் காணப்பட்டன. சந்தேகம் கொண்ட பொது மக்கள் குளத்தில் தேடியபோது அவர் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் காணப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது சடலம் மீட்கப்பட்டு சாவகச்சேரி வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஏ-159,20,9)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1113
சீட்டிழுப்பு திகதி 2020.01.20 திங்கட்கிழமை
I 32 40 58 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 91,839,460/-

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 859
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.01.21
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 59,907,350/-
வெற்றி இலக்கங்கள்
07 35 38 71 P

ராசி
திகதி 21.01.2020
வெற்றி வாரம் 2745
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 11 17 23 50
ரூ. 2,375,356/=

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1640
சீட்டிழுப்பு திகதி 21.01.2020
வெற்றி இலக்கங்கள்
10 51 58 65 Q
ரூ.45, 058, 816 /=

# பச்சிலைப்பள்ளி போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம்,ஜன.22
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் பெண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் புலோப்பளை

ளையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் வானிஷா ஓர் இலக்கைக் கைப்பற்றினார். (23)

◆ ◆ ◆

பெண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் புலோப்பளை கிழக்கு அதிசயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்லிப்



கிழக்கு அதிசயம் விளையாட்டுக் கழக அணி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

நேற்று முன்தினம் திங்கட் கிழமை பளை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் புலோப்பளை கிழக்கு அதிசயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

பளை சாலை விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில், 3 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம் பெற்றது. இதில் 25:11,25:17 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.(23)

◆ ◆ ◆

பெண்களுக்கான கபடி இறுதியாட்டத்தில் புலோப்பளை கிழக்கு அதிசயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதி



இதில் முதலில் துடுப்பெடுத்தாடி புலோப்பளை கிழக்கு அதிசயம் விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் வாஜிஷா 20 ஓட்டங்களையும்,வனிதா 12 ஓட்டங்களை

யது.

இதில் புலோப்பளை கிழக்கு அதிசயம் விளையாட்டுக் கழக அணி 28:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.(23)

◆ ◆ ◆

பெண்களுக்கான கடற்கரை கபடி இறுதியாட்டத்தில் புலோப்பளை



யும் அதிகபட்சமாகப் பெற்றனர். 75 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனபதிலுக்குதுடுப்பெடுத்தாடிய விநாயகர் விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கை இழந்து 37 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். இதில் ஜீவிதா 18 ஓட்டங்களையும், சசிகலா 5 ஓட்டங்க

கிழக்கு அதிசயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் புலோப்பளை கிழக்கு அதிசயம் விளையாட்டுக்கழக அணி 26:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)



# நெல்லியடி மத்தி மகுடம் சூடியது

கரணவாய், ஜன.22
தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்திய கால் பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் பள்ளிமுனை சென்லூசியா மகா வித்தியாலய அணி மோதியது. மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பமான போட்டியின் முதல்பாதியில் இரு அணிகளும் கோல் போடுவதற்கு முயற்சித்த போதிலும் கோல்கள் எதுவும் பதிவு செய்யப்படாமலே முன்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்த 17ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி கோல் பதிவு செய்த பில்லா நெல்லியடி மத்திய கல்லூரியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். மேலதிக கோல்கள் எதுவும் போடப்படாத நிலையில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது நெல்லியடி மத்திய கல்லூரி அணி.

போட்டியின் ஆட்டநாயகனாக நெல்லியடி மத்திய கல்லூரி அணி வீரர் வினித், சிறந்த கோல்காப்பாளராக மன்னார் பள்ளிமுனை சென்லூசியா கல்லூரி அணி கோல் காப்பாளர் ரொசிந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். (23-108)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்.ஜன.22
யாழ். கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏ.இ.சி பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் லீக் சுற்றுக்கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்றுபுதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ்விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.(23)



கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் மெய்வல்லுநர் திறனாய்வு போட்டியை முன்னிட்டு இடம் பெற்ற மரதன் ஓட்ட போட்டியானது ஓய்வு நிலை திட்டமிடல் பணிப்பாளர் ம. பத்மநாதனினால் பரந்தன் சந்தியில் நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. (23)

# ஈஸ்வரன் அணி கிண்ணம் வென்றது




வவுனியா, ஜன.22
புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பின் அனுசரணையுடன் வவுனியா கால் பந்தாட்ட சங்கம் நடத்திய கால் பந்தாட்ட சுற்றுப்போட்டியில் வவுனியா ஈஸ்வரன் அணி கிண்ணம் வென்றது.

நேற்று இடம்பெற்ற இறுதிபோட்டியில் வடதாரகை அணியை எதிர்த்து ஈஸ்வரன் அணி மோதியது. இதில் ஈஸ்வரன் அணி 1:0 என்ற கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை வென்றது. (110)

# கிண்ணம் வென்றது சென்மேரிஸ் வி.க.

தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச்சங்கம் நடத்திய கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையிலான போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மின்ஒளியில் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இரு அணிகளும் முதல்பாதியில் கோல் எதனையும் பதிவு செய்யாது போக முதற்பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழக அணியின் முதலாவது கோல் பதிவானது. குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியினருக்கு கோல் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்த போதிலும் அதனை அவர்கள் தவறவிட்டனர். ஆட்ட நேரமுடிவில் நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தனர். (23)





## எல்லே போட்டியில் விக்ரோறியன்ஸ் வி.க. தங்கம் வென்றது

யாழ்ப்பாணம், ஜன.22

சங்கானை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் ஆண்களுக்கான எல்லே போட்டியில் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழக அணி தங்கப் பதக்கத்தை வென்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்ரோறி விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்து விளையாடிய விக்ரோறி விளையாட்டுக்கழக அணி 35 பந்துகளில் 6 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 30 பந்துகளில் 7 ஓட்டங்களைப் பெற்றது. (23)

## மணற்காடு றோ.க.த.க பாடசாலை அணி சமநிலை தகர்ப்பில் கிண்ணம் வென்றது

கரணவாய், ஜன.22

பரபரப்பான ஆட்டத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை சமநிலை தகர்ப்பு உதைமூலம் சம்பியனானது மணற்காடு றோ.க.த.க பாடசாலை அணி.

இங்கைப் பாடசாலைகள் கால் பந்தாட்ட சம்மேளனம் நடத்திய சமபோசா வெற்றிக் கிண்ணத்துக்கான யாழ். மாவட்ட பாடசாலைக்கு இடையிலான 14 வயது ஆண்களுக்கான கால் பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இவ் இறுதியாட்டத்தில் மணற்காடு றோ.க.த.க. பாடசாலை அணியை எதிர்த்து புனித ஹென்றியரசர் அணி மோதியது. ஆரம்பம் முதல் மிகுந்த பரபரப்புக்கு மத்தியில் இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் கிடைத்த சந்தர்ப்பங்களை தவறவிட ஆட்டம் சமனிலையில் நிறைவடைந்தது.

இதனையடுத்து வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்து. இதில் 3:2 என்ற கோல் கணக்கில் மணற்காடு றோ.க.த.க. அணி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (108)



## தென்னாபிரிக்கா கேப்டனாக குயின்டான் டீ குக் நியமிப்பு

தென்னாபிரிக்கா ரி-20 கிரிக்கெட் அணியின் கேப்டனாக நியமிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது ஒருநாள் கிரிக்கெட் அணியின் கேப்டனாகவும் குயின்டான் டீ குக் நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகின்றது.

அதனைத் தொடர்ந்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகின்றது. இதற்கான தென்னாபிரிக்கா அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு கேப்டனாக குயின்டான் டீ குக் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். அத்தோடு அணியில் புதுமுக வீரர்கள் ஐவர் இணைக்கப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்கா அணி இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு ரி-20 கிரிக்கெட் தொடரில் விளையாடியது. அப்போது அணியின் கேப்டனாக நியமிக்கப்பட்டார். தற்போது ஒருநாள் கிரிக்கெட் அணியின் கேப்டனாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

குயின்டான் டீ குக் இதுவரை 115 ஒருநாள் கிரிக்கெட்டில் விளையாடி 14 சதங்கள், 24 அரைச் சதங்களுடன் 4907 ரன்கள் அடித்துள்ளார். அதிகபட்சமாக ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 178 ரன்கள் அடித்துள்ளார்.

## இங்கிலாந்து கேப்டன் ஜோ ரூட் மோசமான அடைவு




தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் ஜோ ரூட் ஒரே ஓவரில் 28 ரன்கள் வழங்கி மோசமான சாதனையை பதிவு செய்துள்ளார்.


தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி போர்ட் எலிசபெத்தில் நடைபெற்றது. நேற்று முடிவடைந்த இந்த டெஸ்டில் இங்கிலாந்து இன்னிங்ஸ் மற்றும் 53 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

2ஆவது இன்னிங்ஸில் பகுதி நேர பந்து வீச்சாளரான இங்கிலாந்து கேப்டன் ஜோ ரூட் எதிர்பாராத விதமாக விக்கெட்டுக்களை அள்ளினார். அவர் நான்கு விக்கெட்டுக்கள் வீழ்த்தினார். என்றாலும் அவர் வீசிய ஒரு ஓவரில் மகாராஜ் தொடர்ச்சியாக மூன்று பவுண்டரிகள் விளாசினார். அதன்பின் இரண்டு சிக்சர்கள் தூக்கினார். கடைசி பந்தில் பை மூலமாக நான்கு ரன்கள் சென்றது. இதன்மூலம் ஜோ ரூட் ஒரே ஓவரில் 28 ரன்கள் விட்டுக்கொடுத்தார்.


டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு ஓவரில் இதற்கு முன்னர் இரண்டு பந்து வீச்சாளர்கள் 28 ரன்கள் விட்டுக்கொடுத்ததே மிகவும் மோசமான சாதனையை இருந்தது. அந்த இருவருடன் தற்போது ஜோ ரூட்டும் இணைந்துள்ளார்.

இதற்கு முன் லாரா ராபின் பீட்டர்சன் பந்தில் 28 ரன்களும், ஜார்ஜ் பெய்லி ஜேம்ஸ் ஆண்டர்சன் பந்தில் 28 ரன்களும் விட்டுக் கொடுத்திருந்தனர்.

# லிவர்பூல் அணி அசத்தலாட்டம்



ஆட்டம் ஒன்றில் மான்செஸ்டர் யுனைடெட் லிவர்பூல் அணிகள் மோதின.
முதல் பாதி ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் லிவர்பூல் அணி வீரர் விர்ஜில் வான் டிஜிக் அணிக்கு முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். முதல் பாதி ஆட்டத்தில் லிவர்பூல் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் காணப்பட்டது.
இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் இரு அணி வீரர்களும் கோல்கள் போடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அது கைகூடாமல் போனது. இறுதி நிமிடத்தில் லிவர்பூல் அணி வீரர் முகமது சாலா தனது அபார மான ஆட்டத்தால் கோல் போட இறுதியில்




விர்ஜில் வான் டிஜிக், முகமது சாலா கோல் போட மான்செஸ்டர் யுனைடெட் அணியை 2:0 என்ற கணக்கில் வீழ்த்தியது லிவர்பூல் அணி.
இங்கிலீஷ் பிரிமீயர் லீக் கால்பந்தில் நேற்றுமுன் தினம் இரவு நடைபெற்ற யுனைடெட் அணியை 2:0 என வீழ்த்தி லிவர்பூர் அணி வெற்றி பெற்றது.
இந்த வெற்றியின் மூலம் லிவர்பூல் அணி 22 போட்டிகளில் 21 வெற்றி, ஒரு டிரா மூலம் 64 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளது. மான்செஸ்டர் சிட்டி 23 போட்டிகளில் 15இல் வெற்றி, 5இல் தோல்வி , 3இல் டிரா மூலம் 48 புள்ளிகள் பெற்று 2ஆவது இடத்திலும் உள்ளது.

இறுதிக் கருத்தரங்குகள்
SLAS Ltd,
SLAcS
பரீட்சைக்களுக்கான
பொது உளச்சார்பு (IQ)
தினமும் 5.00 Pm - 7.00 pm
ஆரம்பம் - புதன் (22/1)
நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர்
வியாழன் (23/1)
9.00am - 4.00pm
T.P 076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புக்கள் பிரிவு
யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ்நிலையத்திலிருந்து 100m தூரத்தில்

சிறுநீரகம் தேவை
39 வயதுடைய நபர் ஒருவருக்கு A+ வகையிலான சிறுநீரகம் தேவை.
076 740 6094
(CS 1093)(14.17)

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
A/L 2020 மாணவர்களுக்கான
ICT Maths(7) Agri
Geography Media
077 248 7774
வினாத்தாள் வகுப்புக்கள் ஆரம்பம்
25.01.2020 சனிக்கிழமை

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2020 யூலை பரீட்சைக்கான
aat [SriLanka]
[aat1, aat2, aat3]
Qualification:- G.C.E. O/L 6Passes
Medium - Tamil& English.
ஆரம்பம்: 01.02.2020
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149
(m 12370)(13.17)

## இந்தியத் தொடரில் நியூசிலாந்து 2 தொடர்களை கைப்பற்றவேண்டும்

### மெக்மில்லன் தெரிவிப்பு

இந்தியாவுக்கு எதிரான ரி-20, ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களில் இரண்டையாவது நியூசிலாந்து அணி கைப்பற்ற வேண்டும் என கிரேக் மெக்மில்லன் தெரிவித்துள்ளார்.
இந்திய அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஐந்து ரி-20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுகின்றது. ரி-20 தொடர் நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது.
இதில் தொடர்களையாவது வெல்ல வேண்டும் என நியூசிலாந்து அணியின் முன்னாள் வீரர் கிரேக் மெக்மில்லன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
ஆஸ்திரேலியாவில் படுதோல்வியை சந்தித்த பின்னர் இந்தியா தொடர் மிகப்பெரியது. தற்போதுள்ள இந்திய அணி மிகவும் வலிமை மிக்கது. டெஸ்ட், ரி-20, ஒருநாள் என எந்த வகையான கிரிக்கெட்டாக இருந்தாலும் அவர்கள் திறமையாக எதிர்கொள்வார்கள். இதனால் இந்தத் தொடர் சுவாரஸ்யமானதாக இருக்கும். இந்தத் தொடரில் நியூசிலாந்து அணி இரண்டு தொடர்களையாவது வெல்ல வேண்டும். ஐந்து ரி-20 தொடர்களும் முக்கியத்தும் வாய்ந்தது. ஏனெனில் ஒக்ரோபர் மாதம் ஆஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள உலகக் கோப்பைக்கான பயிற்சி போட்டியாக அமையும் - என்றார்.




# மீண்டது இலங்கை

மத்தியூஸின் பொறுப்பான ஆட்டத்தால் சிம்பாப்வே அணி நிர்ணயித்த இலக்கை இலங்கை அணி எட்டி சரிவில் இருந்து மீண்டு வருகின்றது.
இலங்கை அணி சிம்பாப்வேக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை ஹராரேயில் ஆரம்பமாகியது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 358 ரன்களைப் பெற்றது. அணி சார்பில் அதிகபட்சமாக கசுஜா (63), எர்வின் (85), சிகந்தர் ரஜா (41), டிரிபானோ ஆட்டமிழக்காமல் (44) ரன்களையும் பெற்றனர்.
பந்து வீச்சில் எம்புலுடினிய 5 விக்கெட்டையும், லக்மல் 3 விக்கெட்டையும், குமார 2 விக்கெட்டையும் கைப்பற்றினர்.
பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இலங்கை அணி நேற்றுமுன்தின நாள் முடிவில் ஓர் விக்கெட்டை இழந்து 44 ரன்களைப் பெற்றது. திமுத் கருணாரத்னே 12 ரன்களுடனும், மென்ரிஸ் 6 ரன்களுடனும் நேற்றைய நாளுக்காக் களமிறங்கினர். இருவரும் இணைந்து நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதும் கேப்டன் கருணாரத்னே 37 ரன்களைப் பெற்ற போது ஆட்டமிழந்து ஏமாற்றினார். வந்தார் மத்தியூஸ். அவர் குசல் மென்ரிஸ் இணை பொறுப்புணர்ந்து ஆடினர். இருவரது இணைப்பைப் பிரிப்பதற்கு சிம்பாப்வே பந்துவீச்சாளர்கள் பெரும் சிரமப்பட்டனர். இருவருக்குமான இணைப்பாட்டமாக 92 ரன்கள் பகிரப்பட்டன. குசல் மென்ரிஸ் 80 ரன்களை எடுத்து பவிலியன் திரும்பினார். பின்னர் இணைந்த சந்திமல் சொதப்பியிருந்தார். அவர் 12 ரன்களுடன் நடையைக் கட்டினார்.
அணி நேற்றைய நாள் முடிவில் 4 விக்கெட்டை இழந்து 295 ரன்களைப் பெற்றது. மத்தியூஸ் 92 ரன்களுடனும், தனஞ்செய 42 ரன்களுடனும் களத்திலுள்ளனர்.





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.